ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1-0

# குடி அரசு

வருட சந்தா முன்பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1-12
வெளி நாட்டிற்கு ,, — ,, 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஸு தை மீ 6 உ (19—1—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 35


நிமிஷ நேரத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்முய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்
விலை ரூபா 1--8--0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல், (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

## ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கணவலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச் சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1— 0—0 |

## பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1--0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]

கடவுள் கடவுளென காசைத்

தொலைக்காதே

# ஈ. வெ. ராமசாமியின்
## மலாய் நாட்டு விஜயம்.

[ஒரு நிருபர்.]

சமூக சீர்திருத்தத் தலைவர் திரு. ஈ. வெ. ராமசாமியவர்கள் 20-12-29 ம் தேதி காலை தமது மனைவியாருடனும், திருவாளர் எஸ். ராமநாதன் யம். எ பி. எல். சாமி சிதம்பரனுர், நடராஜன் ஆகியவர்களுடனும், இங்கு வந்த ரஜூலாக் கப்பலில் வந்திறங்கினர். விக்டோரியா துறைமுகத்திலும், அதையடுத்த விடங்களிலும், சகல சமூகங்களுஞ்சேர்ந்த பெருந் திரளான இந்திய பிரமுகர்களும், சீன, மலேயா, ஐரோப்பிய பிரமுகர்களும் கூடியிருந்தனர். காலை 6 மணிக்கு கவர்ன்மெண்டு படகு ஒன்றில் லேபர் டிப்டி கண்ட்ரோலர் டெல்டா போர், இந்தியக் கடற்பிரயாணிகளின் கஷ்ட நிவாரண சங்கத் தலைவர் திரு. ஏ. சிங்காரம் பிள்ளை, ஷை சங்க கௌரவ காரியதரிசி திரு. யம். யம். யஸ். முதலியார், மலேயாவில் பிரபல வியாபாரியான ஜனாப் ஆர். இ. மகமது காஸீம் ஜெ. பி. அவர்கள் பிரதி நிதி முதலியோர் கப்பலுக்குச் சென்று பெரியாரையும், திரு. இராமநாதனையும், ஏனையோரையும் வரவேற்றனர். ராமசாமிக்கு திரு. சிங்காரம்பிள்ளையவர்களும், திரு. ராமநாதன் அவர்கட்கு திரு. துரைராஸ் அவர்களும் அழகிய மாலை சூட்டினர். பெரியாரின் மனைவியாருக்கு அழகிய பூச்செண்டளித்தனர். ஒரு தனிப்படகில் அனைவரையும் ஏற்றி விக்டோரியா துறைமுகத்துக்கு அழைத்துச் சென்ருர்கள்.

கரையிலிருந்த மக்கள் அவ்வமயம் மிக்க குதூகலத்துடன் ஆரவாரஞ் செய்தனர். சில குறும்புக்காரர்கள் கலகங்கள் வரும் எனக் கூறியதற்கு மாருக, மக்கள் அமைதியாகவும், சந்தோஷமாகவும் அவர்களை வரவேற்று மகிழ்ந்தனர். ஒவ்வொருவரும் இராமசாமிப் பெரியாரைப் பார்ப்பதற்காகப்பேரூக்கத்துடன்முன் வந்தனர்.

துறைமுகத்திலிருந்து பெரியாரும், ஏனையோரும் மோட்டார் வாகனங்களில், பினங்கு நகர வீதிகள் வழியாக ஐக்கிய இந்திய சங்கத்துக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு பேரா இந்து மகாஜன சங்கத்தார், பினங்கு தமிழர் சங்கத்தார், மருத்துவ குல சங்கத்தார் முதலிய பல சங்கத்தார் வரவேற்புப்பத்திரங்கள் படித்துக் கொடுத்தனர். வரவேற்புப் பத்திரங்கட்குத் தக்கவாறு பதிலளித்ததும்அங்கிருந்து ஆயர் ஈத்தாமிலுள்ள ஜனாப் மகமது ராவுத்தர் அவர்கள்பங்களாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கு பிரபல இந்தியர்கள் பலர் குழுமியிருந்து வரவேற்றனர். தமிழர் முன்னேற்றத்தைப்பற்றியும், தமது கொள்கை, நோக்கம் முதலியவற்றைப்பற்றியும் அங்கு சுமார் ஒன்றேகால் மணி நேரம் சொற்பொழிவாற்றினர்.

மாலை 3 மணிக்கு பினங்கு இந்திய சங்கத்தாரால் வரவேற்கப்பட்டார். அங்கு ஷை சங்கச் சார்பாகவும், மருத்துவ உபசாரப் பத்திரங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. பின்னர், அங்கிருந்து ஈப்போவுக்குப் பிரயாணமானுர்கள். சிலர் வரவேற்கக் கூடாதென்று செய்த பொய்ம்மைப் பிரசாரங்களெல்லாம் வீணுயின.

---

### செங்குந்த வாலிப சங்கம்
கோடுவாய்

31—12—29 மாலை சுமார் 6-30 மணிக்கு மேற்படி சங்க ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட இவ்வூரிலுள்ள செங்குந்த மரபினர் ஆண் பெண் இருபாலரும் திரண்டிருந்தனர். ஸ்ரீமான் மு. ப. முத்துசாமி முதலியாரவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திருவாளர் டி. வடிவேலு மேற்படி சங்கத்தின் தற்கால நிலைமையையும் வரவு செலவு மூலதனம் இருப்பு முதலிய கணக்குகளையும் கூறி முடித்தார். பின்பு சி. அ. நாராயணசாமி என்பவரால் ஒற்றுமை, வர்த்தகம், கைத்தொழில் தமது ஊரிலும்பரப்புவதற்கு ஒவ்வொருவரும் தம்மாலான சிறு முயற்சிகளேனும் செய்யுமாறு பற்பல மேற் கோள்களுடன் விரிவாக ஊக்க முண்டாகும்படி பேசி முடித்தார், என காரியதரிசி எழுதுகிருர்.

## பைபிளுக்கும் கொரானுக்கும் தீ.

லெனின் விதவையின் உத்தரவு.

ருஷிய அரசியல் கல்வி பீரோவின் பல்வேறுசெய்கைகளுக்கும் காரணராயிருக்கும் லெனின் விதவையான மாடம் குருப்ஸ்காய்ஜா சோவியத்ருஷியாவிலுள்ள புத்தகசாலைகளிலிருக்கும் [லைப்ரரி] பைபில், கொரான், டால்மட் முதலிய புத்தகங்களும், பிளாட்டோ க்ரான்ட் ஸ்கோடஸ், ஹியூர், நெயிச்சி, ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் முதலானவர்கள் எழுதியுள்ளபுத்தகங்களுமுட்பட சமய நூல்களையும்தத்துவசாஸ்திரஆராய்ச்சி நூல்களையும்தீயிட்டுக்கொளுத்தி விடும்படி உத்திரவிட்டுவிட்டார். ருஷியாவில் அநேக புத்தகசாலைகளில் பறிமுதல் மூலமாக ஏராளமாக மதசம்பந்தமான புத்தகங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதாயும், இவ்வுத்தரவுப்படி இவையனைத்தும் எரித்து சாம்பலாக்கப் படுமென்றும் தெரிகின்றது.

---

### "செய்யூர் ஆதி திராவிட வாலிபர் சங்கம்"

மேல்படி சங்கத்தின் கூட்டம் 30—12—29 சென்னை கார்ப்போரேஷன் உபாத்தியாயர் திரு. எஸ். இரத்தினவேலு அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் சமுதாய முன்னேற்றத்திற்கான சீர்திருத்தத்தைப்பற்றியும் கஷ்ட ஊழியத்தின் சொற்ப ஊதியத்தைப்பற்றியும் ஒற்றுமையைப் பற்றியும் ஆதிதிராவிடர்களின் விஷயமாய் உழைத்து கியாதிபெற்ற குப்புசாமியார் அவர்கள் சரித்திரத்தைப்பற்யும் அங்கம்பாக்கம் கேஸ் விஷயத்தைப்பற்றியும் சிறந்த உபன்னியாசம்செய்யப்பட்டது என்று ஈ. எம். சாமி எழுதுகிருர்.

### நன்கொடை

சூலூர் யூனியன் போர்டு மெம்பர் திருவாளர் எஸ். வி. ராமசாமித் தேவர் மகள் ஸ்ரீமதி மீனுட்சியம்மாள் அவர்களின் திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு"க்கு நன்கொடையாக ரூபாய் ஒன்று வந்தனத்துடன் வரப்பெற்ருேம்.

[ ப-ர் ]

—0—

### புரட்சிக்குத் தடை.
திருவிதாங்கூர் சமஸ்தான உத்திரவு.

'புரட்சி நீடூழி வாழ்க' என்ற பொருளுள்ள விளம்பரம் எதுவும் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குள் வரக்கூடாதென சமஸ்தான தர்பார்அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

## மதிப்புரைகள்.

### 'சிறுவர்கள் தேகப்பயிற்சி' & "உடலோம்பல்"

திருவாளர் லெ. சோமசுந்திரன் அவர்களால் வெளியிடப்பட்ட இவ்விரண்டு சிறிய புத்தகங்களும் வரப்பெற்ருேம். தனவணிகநாட்டு "சாண்டோ" வாகிய லெ. சோமசுந்திரம் அவர்களால் எழுதப்பட்ட "தேகப்பயிற்சி" என்னும் இச்சிறிய நாலில் சிறுவர்களுக்கு தேகப்பயிற்சி எவ்வளவு அவசியமென்பதையும் "நமது தேக சௌக்கியத்திற்குத் தக்கபடியே நமது குணமும் இருக்கும்" என்பதையும் இன்னும் பல விஷயங்களையும், சுருங்கச் சொல்லிவிளங்க வைத்திருக்கிருர். சுத்தமான தமிழ் நடையில், எழுதப்பட்டு போட்டோ படத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது. "உடலோம்பல்" என்னும் நூல், திருவாளர், திரு. வி. கலியாணசுந்தரம் அவர்களால் செய்யப்பட்ட ஒரு சொற்பொழிவாகும் இவைகள் முக்கியமாக நமது இளைஞர்கள் படித்தறியவேண்டிய நூல்களாகும். இவ்விரண்டும் சேர்ந்து மிகக்குறைந்த விலையாகிய அரையணு ஸ்டாம்புக்கு அனுப்பப்படுகின்றன.

விலாசம்:—

லெ. சோமசுந்திரன்,
கீழைச்சிவற்பட்டி.

### தொழிலாளி பஞ்சாங்கம்.

திருச்சி, ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடத்திலிருந்துவெளியிடப்பட்ட 1930-ம்வருஷத்துப் பஞ்சாங்கம் ஒன்று வரப்பெற்ருேம். இதில் தொழிலாளர் தலைவர் இருவர்கள் படங்களும் தொழிலாளிகளின் சிறப்பையும் அஞ்சாமையையும் குறிப்பிடக்கூடிய வாக்கியங்களும் நிறைந்து விளங்குகின்றன. இந்தகாலெண்டரில் ஆங்கிலத்தேதிகளோடு தமிழ்த் தேதிகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாங்கம் என்ற பெயருக்கேற்ப, கிருஸ்து முகம்மதிய இந்துபண்டிகைகள் முதலான பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

---

### புரோகிதத்தை ஒழிக்கச் சங்கம்.

ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்தியாயர், திவான் சமன்லால், திரு. எல். ஆர். டேர்வி, திரு. டி. ஆர். அம்பத்கார் முதலியோர், புரோகிதத்தை ஒழிக்க ஒரு சங்கத்தை நிறுவவேண்டுமென ஒரு வேண்டுகோளை வெளியிட்டிருக்கின்றனர். சமூகச் சீர்திருத்தத்துக்கும், உலக முன்னேற்றத்துக்கும் இத்தகைய சங்கம் அவசியமென அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

# நீதிக்கு விரோதமான தீர்மானம் பாவச்சுமையைப் பாழ்படுத்தாது

(கைவல்யம்)

சனாதன தர்மமகாநாட்டில் யுக்தா யுக்தமில்லாத ஆலயப் பிரவேசம் ஸான்னித்தியத்தை நாசம் செய்துவிடுமென்றும், தீண்டாமையை விலக்கப்படாதென்றும், தீர்மானமாயிருக்கிறது. நீதிக்கு விரோதமாகவும் நமது ஆச்சாரிகளின் நடத்தைக்கும் அபிப்பிராயங்களுக்கும் ஒத்ததல்லாமலுமிருக்கும் தீர்மானம் நமது முன்னோர்கள் செய்த பாவத்தையும் நாம் இது வரையிலும் செய்து வந்தபாவத்தையும் பாழ் படுத்தாது.

நம்மில் பெரிய ராஜாங்கத்தாரிடம் பெரிய விஷயங்கள் கேட்கிறோம். ஜனங்களும் தம்மில் சிறியவர்களுக்கு பெரிய வரங்கள் தர வேண்டும். இந்தியாவை நசுக்கும் பொருட்டு ஆங்கிலேயர் இங்கு வரவில்லை யென்பதை அவர்கள் மறக்க நாம் இடம் கொடுக்க மாட்டோம் என்று தேசிய வாதி கூறுகிறான். ஜனசமூகத்தில் பிறரைப்போலவே சரீரம் படைத்து உணர்ச்சி, எண்ணம் யாவும் ஒரே மாதிரியாகவுள்ள ஒரே சமூகத்தினரை ஆயுள் காலமுழுவதும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்து அடிமையாக விருக்குமாறு நிர்ப்பந்தித்து, அவர்கள் முன்னேற சாத்தியமில்லாமற் செய்வதற்கே உயர்ந்த ஜாதிக்கார இந்துக்களைத் தெய்வம் இங்கு அனுப்பவில்லையென்றே சமூக சீர்திருத்தவாதி கூறுகிறான். ராஜாங்கத்தார்களே, எங்களையாளும் அதிகாரம் உங்கள் கையிலிருக்கிறது. அதை எங்களுக்கும் கொடுங்கள்; லோபத்தினால் தனக்கே நஷ்டமுண்டாகும் மனுஷிய உரிமைகளும், ஸைபன்சும், ஐரோப்பாவின் அனுபவப் பயன்கள். இந்த செல்வத்தை எங்களுக்குக் கொடுக்கும் பொருட்டாக இங்கிலாந்தை தெய்வம் எங்களுடைய தேசத்தில் கொண்டு வந்து சேர்த்தது. இந்தக் கடமைகளை நிறைவேற்றும்படி அவர்களை வற்புறுத்துவது நம்முடைய கடமை. ஒரு பாலார் தமது கடமையை செய்யா விட்டால் இருபாலாருக்கும் நஷ்டம் என்று நமது தேசியவாதிகள் சொல்லுகிறார்கள். நமது சமயங்களை தாங்கும் பெரியவர்களே! நமது சமூகங்களின் ஒரு பகுதியைக் கொடுமைப்படுத்தியது போதும்; நமது சமயக்கொடுமையும் நமது அறியாமையும் அன்னிய ராஜியமாகப் பரிணமித்தது. எல்லாம் ஆத்மசொரூபம் என்பதும் ஆத்மசொரூபமே கடவுள் என்பதும், அந்தக்கடவுள் எல்லாரிடத்திலும் விளங்குகிறார் என்பதும் நமது சாஸ்திர அனுபவம். அந்த அனுபவத்தை விட்டுவிட்டதால் நமது நாட்டில் பல துன்பங்கள் பலவித காரணத்தால் நிறைந்து விட்டன. அந்தத்துன்பங்கள் தீர வேண்டுமானால் தீண்டாமை யென்னும் பாவத்தைப் போக்கிவிடுங்கள் என்று சமூக சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

மனுஷிய ஜாதி மொத்தத்திற்கே பெரிய திருவிழா நடக்கிறது. அந்த திருவிழாவில் தெய்வம் நம்மையும் கூப்பிடுகிறது. அங்கு போக நாமெல்லாம் ஆசைப்படுகிறோம். அப்படியே தாழ்ந்த ஜாதிக்காரர்களெனப்பட்டவர்களும் நமக்கும் அவர்களுக்கும் பொதுவான கோவிலில் வந்து கலந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள். அதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டாமா? ராஜாங்கத்தாரிடம் பெரிய விஷயங்கள் கேட்கிறோம். சமயப் பொறுப்புகளை வைத்துக் கொண்டிருப்பவர்களும் பெரிய வரங்கள் தர வேண்டும்; இல்லாவிட்டால் ராஜாங்கத்தாரிடம் செய்யும் பிரார்த்தனை பயன் படாதென்றுதானே எல்லா அறிவாளிகளும் சொல்லுகிறார்கள். ராஜீய வாதிகளில் சிலரும், அதிலும் தென்னிந்தியாவில் பலரும், ஜனங்கள் கொடுக்கும் வரத்திற்குத் தடையாக நிற்கும் 'சண்டாளத் தன்மை வேறு எந்த நாட்டிலுமில்லையே!

தெய்வம் பொது தானே; அவனவன் சமயத்தெய்வமும் அதன் கோவில்களும் அந்தந்தத் தெய்வத்தைச் சேர்ந்தவனுக்குப் பொதுவல்லவோ? அந்தந்தத் தெய்வத்தால் அருளப்படும் செல்வம் எல்லாருக்கும் வேண்டாமோ? அந்தச்செல்வத்தை சுமப்போர் பங்கு கொடுப்பதில் லோபம் காட்டுதல் நம்பிக்கைத் துரோகமல்லவோ? அப்பொழுது அவர்கள் தெய்வசிந்தைக்கு விரோதம் செய்து துக்கத்தைப் பரப்புகிறார்கள் எனினும் அவர்கள் ஒளியை ஒரு மரக்காலுக்குள்ளே மூடி வைத்தல் சாத்தியப்படாது. அவரவர்கள் கொடுக்க ஆக்கினை பெற்றதைக் கொடுத்தே தீர வேண்டும். தர்மத்தின் கர்த்தா, காலம். கேவலம், காலத்தின் கருவிகளான இவர்கள் சுயநலக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டே போனால், ஆபத்தும் துயரமுமே விளையும். எப்படியும் அசம்பாவிதத்திற்கு நெடுங்காலம் நாம் இடம் கொடு[illegible]து விதியே ஜனசமூகத்தின்வி[illegible]று பாவனை செய்தால் அப்போது [illegible]றென்று சரித்திரமானது ஒரு சிறிய தடையில் இடறி தலை கீழாகக் கவிழ்ந்து விடும். அதற்கு முன்னே நாமாகவே அவ்வுரிமைகளை அளித்து விட்டால் நம்மை உலகமும் மதிக்கும். அவர்களும் போற்றுவார்கள். அப்படியானால் அவர்கள் அன்னிய மதத்துக்குப்போய் நம்மையெல்லாம் மண்டையில் அடிக்கவும் பெண்டு பிள்ளைகளையெல்லாம் அழுகவும் அதற்காக நாம் ஆங்கிலேயர் காலில் விழுந்து கெஞ்சவும் ஏதுவில்லை.

யுக்தாயுக்தமல்லாத ஆலயப்பிரவேசம் சான்னித்தியத்தை நாசம் செய்துவிடுமாகையால் அதை எதிர்க்கவேண்டுமென்று ஜி. கிருஷ்ணமாச்சாரியும் தீண்டாமைவிலக்கை ஒத்துக்கொள்ளப்படாதென்று என். சீனிவாசாச்சாரியும் தீர்மானம் கொண்டு வந்து சனாதன தரும சபையில் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

கோபுரத்திற்கு மேலிருந்து எல்லாருக்கும் பயன்படும்படியாக, குரு உபதேச மொழிகளை வீசி எறிந்த, ராமானுஜாச்சாரியை குரு அழைத்து, "நீ குருவின்வார்த்தையைஅலட்சியப் படுத்தின பெரும் பாவத்தையல்லவா செய்து விட்டாய்" என்று சொல்லவும், ஆச்சாரிகள் குருவை வணங்கி, "சுவாமி நான் செய்த பாவத்திற்காக எனக்குப் பலன் என்ன"வென்று கேட்கவும், "நரகம் வருமெ"ன்று குரு சொல்லவும், "சுவாமி,எனக்கு நரகம் வந்தாலும் தங்கள் உபதேச வார்த்தையை நான் எல்லாருக்கும் கொடுக்க அதனால் எத்தனையோ பேர்கள் சொர்க்கமடைந்திருப்பார்களே. அதனால் நானொருவன் நரகத்திற்குப் போவதில் திருப்தி யடைகிறேன்" என்றார். அதைக்கேட்ட குரு ராமானுஜாச்சாரியை கட்டித்தழுவி 'என்னைவிடப் பெரியவனானாய் என்னும் அர்த்தத்தோடு கூடின 'எம்பெருமானாரும் ஆனாய்' என்றும் சொன்னார். அப்பேர்ப்பட்ட பரம்பரையையும் அவர்கள் சித்தாந்தங்களான வைணவ மதத்தையும் சேர்ந்தவர்களென்றும் அய்யங்கார் என்னும் பேருக்குமேல் ஆச்சாரியென்னும் பேரையுடையவர்களென்றும் அதனால் உயர்ந்தவர்களென்றும் சொல்லிக் கொள்ளும் மேற்சொன்ன சனாதன ஆச்சாரிகள் அவர்கள் குருமார்களுக்குத் துரோகிகளும் அவர்கள் வைணவ சமயத்திற்குப் பாவிகளாகவும் சாஸ்திரங்களுக்குச் சண்டாளர்களாகவும் அல்லவோ இருக்கிறார்கள்?

இவர்கள் ஆச்சாரியான ராமானுஜரது இருதயம் கருணாகரம் என்றல்லவா சொல்லப்படுகிறது? அவர் மோட்ச துவாரத்தைப் பாப்பானுக்கும் பறையனுக்கும் பேதமின்றி திறந்து விட்டு கோவில்களில் எல்லாருக்கும் உரிமைகளை உண்டு பண்ணவல்லவோ செய்தார்? அவர் மரபில் வந்த சைதன்னியர் ஒவ்வொருவரும் ஜாதி பேதமின்றி பரகதியடையுமாறு ஞானக் கதவைத் திறந்துவைத்தார். இவர் பிராமணர்களுக்குள்ளே தர்க்கசாஸ்திரம் அதிகமாகப்பயிலும் வம்சத்தில் பிறந்து தாமும் தர்க்கசாஸ்திர பண்டிதரெனப் பெயரெடுத்து பல பண்டிதருடனும் வாதம் புரிந்து திக்விஜயம் செய்தவர். இப்பெரியார்களின் வைணவ சமயத்திலிருந்துகொண்டு அதனால் பெரிய பிராமணர்களென்று சொல்லிக்கொள்ளும் ஜி. கிருஷ்ணமாச்சாரியும், என். சீனிவாசாச்சாரியும், அவர்களைச்சேர்ந்த பல அய்யங்கார்களும், யுக்தா யுக்தமில்லாத ஆலயப்பிரவேசம் ஸான்னித்தியத்தைக் கெடுத்துவிடுமென்றும் தீண்டாமை யிருக்க வேண்டுமென்றும் சொல்லுவது குரு பரம்பரைக்கு விரோதமல்லவா? இவர்கள் குரு பரம்பரைச் சாதியைச் சேர்ந்தவர்களா, புராதன பிராமண பரம்பரைதானா? ஆரிய ஜாதியில் வந்து கலந்த தாத்தாரி, பிண்டாரி, மிலேச்சர் முதலிய ஜாதிகளா? தரித்திரருக்கும் தீனருக்கும் ஜாதி இழந்தவர்களுக்கும் துர்ப்பலர்களுக்கும் ஜனங்களால் தள்ளிவிடப்பட்டவர்களுக்கும் வைணவ சமயம் அடைக்கலமளிக்கிறதென்று சொல்லுவது எந்த ஸான்னித்தியத்தால்? நல்லெண்ணைப் புளியோதரை, நெய்யின் வெண்பொங்கல் இவைகளால் உண்டாகும் மந்தத்திலும், பெருமாளை எழுந்தருளப்பண்ணுவது பெருமாள் சேவை என்னும் ஜீவனத்திலும் ஸான்னித்தியமிருக்காது. இரக்கப்பட்டு எல்லாருக்கும் ஆதரவு அளிப்பதிலேயே ஸான்னித்யமிருக்கவேண்டும். இந்த ஸான்னித்யத்தை உணராமல் எத்தனை காலம் பெருமாள் சேவை செய்தாலும், அவன் நரகத்தைத்தானடைவான்.

ராமானுஜாச்சாரியின் குருவான பெரியநம்பிகள் மாரனேறு நம்பியான பஞ்சமருக்கு வந்த ராஜபிளவைக்கு மருந்துவைத்துக் கட்டி அதற்கும் அவருக்கும் வேண்டிய ஊழியம் செய்தும் அவர் இறந்துபோக, அவர் பிரேதத்திற்குப் புத்திரன் செய்ய வேண்டிய உத்திரகிரியைகளை தன் கையாலே தானே செய்து முடித்து குளிக்காமல் தன் வீடுபோய் நித்திய கர்மங்களை முடித்து பெருமாள் ஆராதனையும் செய்து தன் வீட்டிலிருப்பதைக் கண்ட சீரங்கத்து அய்யங்கார்கள் அவரை பிரஷ்டிசெய்து அவர் வீட்டைச் சுற்றியும் கள்ளியை வெட்டிப்போட்டு அவர் வெளியில் வராமலும் அவர் வீட்டிற்கு யாரும் போகாமலும் செய்துவிட்டார்கள். அப்படி யிருக்கையில் சீரங்கப்பெருமாள் ஊர்கோலம் அவ்வீட்டுவழியே வந்தது. அவர் வீட்டண்டைவந்தவுடன் பெருமாள் ரதம் நின்றுவிட்டது. எவ்வளவோ பிரயத்தனம் செய்து பார்த்தார்கள். ரதம் அசையவில்லை. உடனே சீரங்கத்து அய்யங்கார்களெல்லாம் நாம் நம்பிக்குச் செய்த அபசாரமோ வென்று சந்தேகப்பட்டு அவர் வீட்டைச் சுற்றியும் போட்ட கள்ளியை யெடுத்துவிட்டு அவரை வணங்கி அழைத்துவந்து பெருமாள் ரதத்தைத்தொடும்படியாகச் செய்தார்கள். ரதம் சென்றது, என்னும் சரித்திர

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—சுந்தரகாண்டம்

### கட்டுரை—10

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

(சருக்கம் 38)

சீதை தானும் ராமனும் தனித்திருக்கும் போது நடந்த சில செய்திகளைக் கூறத் தொடங்கினாள். "அனும! சித்திரக்கூட மலையில் மந்தாக்கினிக் கரையில் நாங்கள் இருக்கும் போது நடந்த ஒரு வரலாற்றைக் கூறுகின்றேன், கேள். இதை ராமனிடத்தில் சொல். நான் ஒரு நாள் காட்டில் விளையாடி அலுத்து இராமன் மடியில் உட்கார்ந்தேன். அப்போது ஓர் காக்கை என் கொங்கைகளுக்கிடையில் குத்திற்று. நான் ஒரு மண்ணாங் கட்டியை எறிந்து விரட்டினேன். ஆனால் அது போகாமல் என் கொங்கைகளைக்குத்திக்கொண்டு அங்கேயே இருந்தது. அது என் கொங்கைப்புலாலிலேயே கண்ணாயிருந்தது. அதை அடித்துத் துரத்துவதற்கு என் அரைநூல் மாலையை இழுக்கும்போது என் உடை அவிழ்ந்து நழுவியதை இராமன் பார்த்துப் பரிகசித்தார். நான் ஓடி வெருட்டினேன். அது விடாமல் என்னைக் குத்திக் கொண்டு இருந்தது. நான் இராமன் மடியில் படுத்துத்தூங்கிவிட்டேன். இராமனும் என் மடியில் தூங்கினார். காகம் அடிக்கடி இடைவிடாமல் என் கொங்கைகளைக் கீறியது. அதனால் இரத்தம் பெருகி இராமன் மேல் விழுந்தது. நானும் அவரை எழுப்பினேன். என் கொங்கைகள் கீறப்பட்டிருப்பதைக்கண்டு இராமன் சினம் கொண்டு காகத்தைப் பார்த்து அதன் இயற்கை உருவையும் எண்ணத்தையும் அறிந்து ஓர் தருப்பையைக் கிள்ளி நான்முகன் மந்திரம் சொல்லி விட்டார். அது காகத்தைத் துரத்த காகம் ஓடி தனது தந்தையாகிய இந்திரன் முதலியவரிடம் சரண் புகுந்து அவர்களால் கைவிடப்பட்டுக் கடைசியாக இராமனையே சரணமாக அடைந்தது. இராமன் அதனைப்பாது காக்க இசைந்து அத்தருப்பைக்குப் புகல் சொல்லுமாறு கட்டளையிட, காகம் தன் வலக்கண்ணைத் தந்தது. தருப்பை அதன் வலக்கண்ணை அழித்தது. இத்தகைய இராமன் என்னை மீட்காதது வியப்பே. அது எனக்கு மிகவும் துன்பந்தருகிறது" என்றாள். அனுமான் அவளை இராமன் மிக விரைவில் மீட்பானென ஆறுதல் கூறினான். அதற்கு சீதை, "என் வணக்கத்தை இராமனுக்குச் சொல்" செல்வத்தையும் தன் மனைவியையும் விட்டுவந்த இலக்குவனை என்னைப் பற்றி கவனிக்கச் சொல். முன் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தால் இலக்குமியை இழந்தான். அவளை நாராயணன் அசுவமேதம் செய்வித்து மீட்டுத்தந்தான்." என்று சொல்லி தன் சூடாமணியை அனுமானிடம் கொடுத்தாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சீதையும் இராமனும் தனித்திருக்கும் போது இந்திரனுடைய மகனாகிய சயந்தன் காக்கையைப் போல உருவம் தாங்கி வந்து சீதையினுடைய கொங்கைகளைக் குத்தினான். அவள் அதை எவ்வளவு வெருட்டியும் அது போகவில்லை. அது ஓயாமல் அவளுடைய கொங்கைகளைக் குத்திக்கொண்டே இருந்தது. இவ்வளவையும் கண்ட இராமன் ஒன்றும் செய்யவில்லை. அவள் அதைத் துரத்துவதற்கு தன் அரை நூல் மாலையை அவிழ்த்தபோது அவளுடைய உடை அவிழ்ந்து விட்டது. அதுகண்டு இராமன் அவளைப் பரிகசித்தனனாம்! என்னே இவனுடைய அறிவுடைமை! தன்னுடைய மனைவி கொங்கைகளைத் தன் கண் காணக் காக்கையுருக்கொண்டு இந்திரன் மகன் குத்தக்கண்டும்அதை வெருட்டாமல் வாளாஇருந்தனனே! பரிதாபம்! காமக்கள்வனாகிய இந்திரனுக்குச் சயந்தன் தகுந்த மைந்தனே! காக்கை உருக்கொண்டு திருமகளேயாய சீதையின் கொங்கைகளை அவளுடைய கணவனாகிய திருமாலேயான இராமனுடைய கண்காணக் குத்தினனே! இதுவன்றோ பெருமை! வைணவர்கள் சித்தாந்தப்படி திருமாலடியவர்கள் யாவரேயாயினும் இறப்பின் அவர்களை இளம் பெண்ணுருக்கொண்டு திருமகள் எடுத்து மார்போடணைத்துப்பால் கொடுப்பாளாம்! அவர்களும் அவளது கொங்கைப்பாலை உண்பார்களாம்' இதுவே வைகுண்டத்திலடையும் பேரின்பமாம்! இளம் பெண்ணின் கொங்கையைப் பற்றிப் பால் குடிப்பதினும் பேரின்பம் தருவது பிறிதில்லையென்பதே அவர்கள் கொள்கை போலும்! அதனாலேயே அக்கொங்கைகளை இந்திரன் மகனாகிய சயந்தன் குத்தினான் போலும்! ஆனால் இவன் மடுவிலிருந்து தாயில் வருகிறதென்று அதை அரிந்து குடிப்பதொப்ப அவளுடைய கொங்கைகளைக் குத்திக்குத்தித் தசையைக் கடித்து உண்டனனாம்! என்னே வெறுக்கத்தகுந்த செயல்! இதுவே தேவர்கோன் மகன் செயலாயின் ஏனைத் தேவர்தம் செயல் யாதாயிருந்திருக்குமோ?

காக்கை விடாமல் அவளுடைய கொங்கைகளைக் குத்திக் கொண்டிருக்கும் போதே சீதை இராமனுடைய மடியில் படுத்துத் தூங்கிவிட்டாளாம்! என்னே இவளுடைய மேன்மைத் தன்மை! இவளும் ஒருபெண் தானோ? முரட்டுத்தனமே அரக்கியர் இயல்பெனில் இதனினும் முரட்டுத்தனம் வேறு உளதாமோ? அதனால் சீதையினும் கொடிய அரக்கியர் வேறு யாவர் உளர்? உடலிலுள்ள உறுப்புகளில் மிகவும் மெல்லியனவாகிய கொங்கைகளில் இரத்தம் ஓட ஒருவன் குத்திக் கொண்டிருக்கும் போது ஒரு பெண் தூங்கினாளென்றால் இவள் பேயாக வேஇருத்தல் வேண்டும். அதிலொரு சுகங்கண்டன்றோ கண்ணுறக்கமுற்றாள் சீதை! தன் மடியில் படுத்திருக்கும் தனது மனைவியின் கொங்கைகளை ஒரு காகம் குத்தக் கண்ணாரக் கண்டும் ஒன்றும் செய்யாமல் இராமனும் தூங்கி விட்டனனாம்! இவன் தன் ஆண்மையும் அறிவும் இரக்கமும் இருந்தவாறு மிகவும் அழகிதே! இப்பேதையையும் சிலர் தெய்வமாகக் கருதுகின்றனரே! அறியாமைக்கும் ஓர் எல்லையில்லையோ?

சீதையினுடைய கொங்கைகளினின்றும் இரத்தம்சிந்தினவாம். அதுவரை அவள் விழிக்கவில்லை. காமமிகுதியுடையார் செயல் இது தான் போலும்! பின்னர் எழுந்த சீதை இராமனை எழுப்ப தன் மீது இரத்தம் சிந்தி இருத்தலையும் சீதையின் கொங்கைகள் கீறப் பெற்றிருத்தலையும் கண்ட இராமன் அப்பொழுது தான் அக்காகத்தின் இயற்கை உருவையும் எண்ணத்தையும் அறிந்தனனாம். அது வரை மடமை அவனை மூடியிருந்தது! சீதையின் கொங்கையைக் கடித்துச் சுவைத்தின்புற்றிருந்த சயந்தன்.மேல் ஓர் புல்லை மந்திரம் கூறி எவினனாம் இராமன். அப்புல் சயந்தனைத் துரத்திச் சென்றதாம்! என்ன ஆச்சரியம்! அறிஞர் ஒப்புமாறுளதோ இது?

இராமன் தன்னை வந்தடைந்த காக்கையை 'இப் புல்லுக்குப் புகல் சொல்' என்று வினவ, அது தன் வலக்கண்ணைத் தருவதாகக் கூறிற்றாம். எல்லா உறுப்புகளிலும் தலைசிறந்த கண்ணைத் தருவதாகச் சயந்தன் கூறினனென்பது அறிவுக்குப் பொருந்துகின்றதா? இல்லை. இல்லை. தன் சிறகு மயிரில் ஒன்றையே அவன் தரஇசைந்திருப்பான். மற்றப்படி அவன் வலக்கண்ணைத்தர இசைந்தனனென்பதும் அப்புல்லம்பு அக்கண்ணைச்சிதைத்ததென்பதும் கட்டுக் கதையே!

சீதை அனுமனிடம், "செல்வத்தையும் தன் மனைவியரையும் விட்டு வந்த இலக்குவனை என்னைப்பற்றிக் கவனிக்கச்சொல்" என்று கூறினாள். இதனால் இலக்குவனும் இராமனைப்போல் பல மனைவியரை வைத்திருந்தான் என்பது தெரிகிறது. தசரதன் மக்கள் எப்படி இருந்திருப்பர்?

விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தால் இந்திரன் இலக்குமியை இழந்தனனாம். இதனால் அசுரரும் தெய்வத்தன்மை யுடையர்போலும்! இலக்குமி என்பது இந்திரன் மனைவிக்கும் பெயராமோ? அவளைத் திருமால் அசுவமேதயாகம் செய்வித்து மீட்டுத் தந்தானாம். அசுவமேதயாகம் செய்வதால், இழந்தமனைவி எவ்வாறு கிடைப்பாளோ? தேவர்களுடைய அறிவற்ற செயல்கள் அழகியனவே!

இந்திரனுடைய இழி செயல்களில் ஒன்றாக அவன் தந்தையின் மூத்த மனைவியின பெண்குறியுள் நுழைந்து அவள் கொண்டிருந்த கருவை எழுதுண்டுகளாக வெட்டினான் என்பதை முன் பாலகாண்டம் ஆராய்ச்சியில் கண்டோம். அச்செயலைச் செய்வதற்கு அவள் எப்போது ஒழுக்கந் தவறிப் போகிறாளென, எதிர்பார்த்திருந்து ஒருநாள் அவள் பகலில் தூங்கியதுகண்டு அதனால் அவள் ஒழுக்கங் கெட்டனளெனத் துணிந்து அவ்விழி செயலைப் புரிந்தனனாம். பகலில் உறங்குதல் ஒழுக்கங்கெட்ட செயல். இதனை இராமனும் சீதையும் செய்யக் கண்டோம். இதனால்இவர்கள் மிகவும் ஒழுக்கக்கேடர்போலும்! இதனாலேயே இந்திரன் மகனாகிய சயந்தன் தன் தந்தையைப்போல இங்கு சீதையின் கொங்கைகளை விரும்பிக் கொத்திக் கொத்திப் புண்ணாக்கி மகிழ்ந்தான்போல இருக்கிறது! தந்தைக்கேற்ற மகனே! இனி கம்பர் பொய்ம்மையை ஆராய்வோம்.

இராமனும் சீதையும் பகலில் விளையாடித் தூங்கியதையும், காகம் வந்து சீதையைக்கொத்தியதையும், அவளுடை நெகிழ்ந்ததையும், இராமன் அது கண்டு சிரித்ததையும் கம்பர் கூறவில்லை. இந்திரனையும் ஏனைய தேவரையும் காகம் அடைந்ததென்றுவால்மீகி கூற நான்முகனையும் சிவனையும் அது அடைந்தது, அவர்களால் அதைக் காக்க முடியவில்லை. என்று கம்பர் கூறி நான்முகன், சிவன் இவர்களுடைய சிறுமையைக் காட்டினார். இது கம்பர் பாடலாயிருப்பின் வெறுக்கத் தகுந்த குறும்புப் பாடலே. மதவெறியாளர் செயலே இது.

இராமனுடைய வினாவுக்குச் சயந்தன் தனது வலக் கண்ணைக் கொடுத்தார், அதனைப் புல்லம்பு சிதைத்ததென வால்மீகி கூறுகிறார். கம்பரோ, இராமன் சயந்தனை வினவாமலே அவனுடைய இரண்டு கண்களையும் அம்பால் பிடுங்கினன் என்று கூறுகிறார். இத்துடன் கம்பர் நின்றாரல்லர். சூடாமணிப்படலம் பாடல் 81-ல் நீ உருக்கொண்ட இக்காகங்களுக்கெல்லாம் இரண்டுகண்ணும் போய் இரண்டுக்கும் பொதுவாக ஒரு கண்மணி நிற்க" என்று இராமன் கூறியதாகக் கம்பர் கூறுகிறார். இப் பொருந்தா வரலாற்றை இவர் யாண்டுக் கண்டார்? இதனையே இவர் காட்சிப் படலம், பாடல் 28-லும் "காகமுற்றுமோர் கண்ணியராக்கிய வேகவென்றியை" என்று கூறுகிறார். இது அறியாதார் கூற்று. இதனைக் கம்பர்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

# அகில திருவாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாடு

(ஒரு நிருபர்)

## தலைவர்கள் வருகை

டிசம்பர் 17 ந்தேதி நாகர்கோவிலில் கூடிய அகில திருவிதாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாட்டுக்கு சென்னை, திருச்சி தஞ்சை, மதுரை, காரைக்குடி, முதலிய பல ஊர்களிலிருந்தும் தலைவர்களும், பிரதிநிதிகளும், ஏராளமாகப் புறப்பட்டுச் சென்றனர். திருச்சி, மதுரை, விருதுநகர் மணியாச்சி முதலிய பல ஸ்டேஷன்களில் சுயமரியாதைச் சங்கப் பிரதிநிதிகள் தலைவர்களை வரவேற்று பூமாலை சூட்டி ஜே! கோஷம் செய்தனர். திருவாளர்கள் ஜே. என். சுப்பையா, டாக்டர் எம். ஏ. நெட்டோ முதலியோர் திருநெல்வேலி ஸ்டேஷனில் தலைவர்களை வரவேற்றுச் சிற்றுண்டியளித்தனர். அங்கிருந்து தனியாக அமர்த்தப்பட்ட கார்களில் தலைவர்கள் நாகர்கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நாங்குநேரி, பணகுடி, ஆறுவாய்மொழி முதலிய பல விடங்களிலும் சுயமரியாதைச் சங்கத்தினர் திரு. எம். கே. ரெட்டியார், திரு. ஜே. எஸ். கண்ணப்பர் முதலிய தலைவர்களை வரவேற்று மாலையிட்டனர்.

கார்கள் நாகர்கோவில் மணிமேடையை அடைந்ததும், மகாநாட்டுப் பொதுக்காரியதரிசி திரு. சங்கரன் பிள்ளை அவர்கள் தலைமையில் சுமார் 500 பேர்கட்கு மேல்வந்து தலைவர்களை வரவேற்று மாலையிட்டு, வாத்தியங்கள் ஒலிக்க ஜே! கோஷத்துடன் ஊர்வலமாக, நகரின் முக்கிய வீதி வழியாக அழைத்துச் சென்றனர். வரவேற்புக்கமிட்டித் தலைவர் திரு. பி. சி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வீட்டினருகில் ஊர்வலம் வந்ததும், வரவேற்புக் கமிட்டியினர் பலரும் தலைவர்களை வரவேற்று மாலை சூட்டினர்.

திருநெல்வேலிக்கு இரவு 9-30 மணிக்கு வந்த திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் பிரயாணஞ் செய்து வந்த சென்னை "ரிவோல்ட்" உதவி ஆசிரியர் திரு. எஸ். குருசாமி, திருமதி. குஞ்சிதமம்மாள், திருவாளர்கள் ஸி. ஆ. பெ. விசுவநாதம், திருமதி. அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் முதலியோர்களைநாகர்கோயிலுக்குஇரவு 12-30-க்கு அழைத்து வரப்பட்டது.

## நாகர் கோவிலில் என்றுமில்லா உற்சாகம்

(0)

## தவலவர்கள் சொற்பெருக்கு.

(0)

மகாநாட்டுப் பந்தல்.

அகில திருவிதாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாடு கூடுவதற்காக தென்னங் கீத்துகளால் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. பி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பங்களாவுக்கு மேற்கே ஒரு பெரிய கொட்டகை யொன்று போடப்பட்டு வெள்ளைத் துணிகளாலும் சிவப்புத் துணிகளாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பந்தல் கால்களிலெல்லாம் பச்சைஇலைகள்வைத்துக் கட்டப்பட்டிருந்தது. கொட்டகை வாசலில் ஓர் வளைவுப் பந்தல் போடப்பட்டு மிக அழகாக காகிதத்தினால் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. அதில் ஈ. வெ. ராமசாமிக்கு ஜே! என்று எழுதப்பட்டிருந்தது. கொட்டகையைச் சுற்றிலும் தென்னங் கீத்துகளால் வேலி போடப்பட்டு பிரதிநிதிகள், விசிட்டர்கள் சௌகரியத்தை உத்தேசித்து சிற்றுண்டிச் சாலைகள் வைக்கப்பட்டிருந்தன. மகாநாட்டுக் கொட்டகைப் பந்தலுள் காகிதப் பூக்களாலும் படங்களாலும் இனிது அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. தொங்கவிடப்பட்டிருந்த படங்களில் முக்கியமாக, ஈ. வெ. ராமசாமி, பானகல் அரசர், திரு. காந்தி, சர் பி. டி. தியாகராயச் செட்டியார், டி. எம். நாயர், யேசுநாதர், லாலா லஜபதிராய், ஸ்ரீ நாராயண குருசுவாமிகள் முதலியோர்களுடைய படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பின்னும் கீழ்க்கண்ட சுயமரியாதை வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்த அட்டைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. "மக்கட் குழைத்தல் தக்கோர்க் கரிகுறி" வேற்றுமை மரம் வேரோடு வீழ்க "உயர்வு வேண்டின் ஒழுக்கம் வேண்டும்" "கடவுளைக் காட்ட நமக்குத் தரகர் ஏன்". "பாரில் கோயில் பார்ப்பனர் கோட்டை" "பார்ப்பன சூழ்ச்சியில் படாது பிழை" புராணக் குப்பையில் புரளாது எழு" "பெண்கள் நமக்குக் கண்களன்றோ" "அன்பே அணிகலம் அன்பே அவசியம்" "வேதமென்பது சூதன்றி வேறன்று" "கடவுளைப்பற்றி கவலை வேண்டாம்" "கடவுள் கடவுளென காசைத் தொலையாதே" "காக்கும் கடவுள் காப்பார் கவலையேன்" "சுயமரியாதையே சுதந்தரத்திற்கு வழி' "சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு" என்பனவாகும். தலைவர்கள் அமருவதற்கு சிறு மேடையொன்று கட்டி அதில் அழகிய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பிரதிநிதிகளும் விசிட்டர்களும் உட்காருவதற்கு பெஞ்சுகளும் ஜமுக்காளங்களும் போடப்பட்டிருந்தன.

மகாநாடு.

27-உ 10 மணிக்கு மகாநாடு மகாநாட்டுப் பந்தலில் கூடிற்று. ஏராளமான பிரதிநிதிகளும் விசிட்டர்களும் வந்திருந்தனர். பெண்களும் சுமார் 200 பேருக்கு மேல் வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களின் முக்கியஸ்தர்கள், திருவாளர்கல் பி. சிதம்பரம் பிள்ளை, பி. ஏ. பி. எல்., ஏ. சங்கரம் பிள்ளை, பி. ஏ. பி. எல். எம். கோவிந்தன், பி. ஏ. பி. எல்., ரிடையர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜ், டி. கே. மாதவன், மன்னத்து பத்பஞ்த பிள்ளை, எம். எஸ். நாயர் பி. ஏ. பி. எல். ஏ., நாராயண பிள்ளை பி. ஏ. பி. எல்,. ஏ. தாணுப் பிள்ளை பி. ஏ. பி. எல்., எம். எல். சி., கோட்டூர் கொஞ்சு கிருஷ்ணா பிள்ளை பி, ஏ. பி. எல். ஏ. பாலகிருஷ்ண பிள்ளை பி. ஏ. பி. எல்., சி. அச்சுதமேனன் பி. ஏ. பி. எல்., கே. பி. செய்யாலக்கால், டி. சி. கேசவ பிள்ளை எம். எல். சி, டி. பிரான்சிஸ் எம். எல். சி, கே. மாதவன் பிள்ளை எம். எல். சி, எம். அகமதுக்கண்ணு மகமது முஸ்தபா, எஸ். குருசாமி, வி. செல்லப்ப நாடார் பி. ஏ., கே. நாராயணப் பெருமாள் நாடார் பி. ஏ., கொஞ்சுக் கண்ணன்நம்பியார், ஏ. பி. நாயர், டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ. பி. எல் எம். எல். சி., ஸி. ஆ. பெ. விசுவநாதம், எஸ்.வி. லிங்கம், மதுரை கோபால கிருஷ்ணக்கோன் கே. வி. அழகிரிசாமி கீர்த்திவாஸ், வெங்கிடாசலம், வி. சி. ராமசாமி, டி. பி. ஆறுமுகம் பிள்ளை, ஆர். ராமலிங்கம், எஸ். எம். மைக்கேல், கே. இராமய்யா பிள்ளை, ராமசாமி, அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள், மிஸ். மனோகரம், மிஸ். மங்களம், மிஸ் குஞ்சிதம் குருசாமி, விருதுநகர் ராமசாமி, டாக்டர் எம். ஏ. நெட்டோ, எஸ். குற்றாலலிங்கம், திருச்சி இராவணதாஸ், பிச்சைமுத்துக்கோனர், தா. கொண்டையா நாயுடு, சுந்தர ராஜுலு நாயுடு சுப்பாநாயுடு முதலியோர்களாகும்.

முதலில் திருச்சி திரு. ராவணதாஸ் அவர்கள் இனிது சுயமரியாதை கீதங்கள் பாடினார். மகாநாட்டு வரவேற்புக்கமிட்டித் தலைவர் திரு. பி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் திரு. பி. டி. ராஜன், எம். எல். சி. அவர்களை மகாநாட்டைத் திறந்துவைக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

திறப்பு விழா.

திரு. பி. டி. ராஜன் [பார்-அட்லா] எம். எல். ஸி. அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்கும்போது நிகழ்த்திய சொற்பெருக்கின் சுருக்கம் வருமாறு:—

நான் இத்தகைய மகாநாடுகளை இரு காரணங்களைக் கொண்டு ஆதரிக்கின்றேன். நாம் இதுவரையில் அரசியல் விஷயங்களிலேயே மிகுதியும் ஈடுபட்டு வந்தோம். சமூக, ஒழுக்க, பொருளாதாரவிஷயங்களில் அதிகமாகத் தலையிடவில்லை. இவையொன்றை யொன்றுபற்றி நிற்பதால், அரசியலைப் போன்று ஏனைய விஷயங்களும் அதி முக்கியமானவை யென்பதையும், முன்னேற்ற மென்பது இத்துறைகளிலெல்லாம் சீர்திருத்தம் பெறுவதுதானென்பதையும் நாம் இப்பொழுது உணர்ந்துகொண்டோம். எத்துணைப் பழைமையானவையா யிருப்பினும், எத்துணை உயர்ந்தனவாக மதிக்கப்பட்ட சாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளனவாயினும், இப்பொழுது அவை நமது முன்னேற்றத்திற்குப் பெருந் தடை செய்வதால், அவற்றைத் தொலைத்துவிட்டு மறுவேலை பார்க்கவே

ண்டுமென்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் நன்கு பதிந்துவிட்டது. இம் மகாநாடுகள் இத்தகைய புத்துணர்ச்சிகளை நன்கு ரூபித்துக் காட்டுகின்றன.

பெரும் எதிர்ப்பைத்தகர்த்தெறிந்தே, இந்துமத தர்ம பரிபாலன மசோதா, சாரதா மசோதா முதலிய முற்போக்கிற்றலையான சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றோம். சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்களெப்பொழுதும் "மதம் போச்சு" என்று கத்துவது வழக்கந்தான். இவர் எக்காலத்தும் எல்லா தேசங்களிலும் இருந்து வருகின்றனர். சிறிது காலத்திற்கு இவர்களுடைய எதிர்ப்பு நிற்குமாயினும், பொது உணர்ச்சியென்னும் பிரவாகத்தை அணைபோட்டுத் தடுக்க முடியாமல், அவ் வெள்ளத்தால் அடிக்கப்பட்டு ஆழ்ந்துபோதல் உறுதி.

ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்கும், ஒரு வகுப்பிற்கும் மற்றொரு வகுப்பிற்கும் வேற்றுமையுண்டுபண்ணுவதும், தனி மனிதர்கட்கும், வகுப்புகட்கும் பேசும் சுதந்திரமளிக்க மறுப்பதும், மக்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதுமான திட்டத்தை மதம் அங்கீகரிக்குமானால், அத்தகைய மதம் எவர்க்கும் உபயோகமாக இராது. மதம் மனிதனால் ஆக்கப்பட்டதாதலால், மனிதனுடைய முன்னேற்றத்துக்கு உதவி புரியத்தக்க விதத்தில் அது மாற்றப்படலாம்; மாற்றப்படக்கூடும். சீர்திருத்தக்காரர்கள் ஜனங்களுக்கு அறிவுறுத்தி, சட்டங்கள் தலையிடுமுன்பு அவர்களுடைய ஆதரவையும் அனுதாபத்தையும் பெறவேண்டும். சீமாட்டிகளே! சீமான்களே! உங்கட்கு நன்றிசெலுத்தி இம் மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

## வரவேற்புத் தலைவர் சொற்பெருக்கு

பின்னர் வரவேற்புத் தலைவர் திரு. பி. சிதம்பரம் பிள்ளையவர்கள் பி. ஏ. பி. எல். பிரதிநிதிகளையும் ஏனையோரையும் வரவேற்றுத் தமது சொற்பெருக்கை நிகழ்த்தினார். அதன் முக்கியபகுதிகள்பின் வருமாறு:—

சீமாட்டிகளே! சீமான்களே!

## சுயமரியாதை இயக்கம்

நாம் இந்நாடெங்கும் சுயமரியாதை இயக்கத்தைப் பரவச்செய்ய முனைந்துள்ளோம். சுயமரியாதை இயக்கம் கடவுளையும் கோயில்களையும் அழிப்பதற்காகத் தோற்றப்பட்டதல்ல. நமது பகைவர்கள் அவ்வாறு கூறுகின்றார்கள். விளக்கிக் கூறப்புகின், கடவுளுக்கும் கடவுளைத்தொழுபவனுக்குமிடையே தரகன் வேண்டாமென்பதே நமது கொள்கை. இத்தரகுத் தொழில் கோயிலில் நடைபெறினும் சரி, புறத்தே நடைபெறினும் சரி, இப்பொழுதுள்ள நிலைமையில் மடமைக்கும், அநீதிக்கும், அக்கிரமங்கட்கும் இருப்பிடங்களாய் இருந்து வரும் தீய இவ்வில்லங்களை நாம் உண்மைக் கோயில்களாக்க முயல்கின்றோம். ஏற்கனவே பருத்துக் கொழுத்த சோம்பேறிகட்காக வீணாக்கப்படும் பொருளை நாம் சாதி வேற்றுமையின்றி கல்விக்கும், சுகாதாரத்துக்கும், உடற்பாதுகாப்புக்கும் ஈடுபடுத்த விரும்புகின்றோம். மேலும் நம்மவர்கள் கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த, சமண மதத்தினரை மிக்க மதிப்புடன் பாராட்டுமாறு வேண்டுகின்றோம். எல்லா மத தர்ம சொத்துக்களில் மிகுந்த பொருளை ஒன்றாய்ச் சேர்த்து, அதனை நோயாளிகள், அங்கவீனர்கள், அரலைகள் இவர்கள் பாதுகாப்புக்கும், கல்விக்கும், ஏழைகட்கும் செலவிட விழைகின்றோம். சமூகத்தைப்பொருட்படுத்தாத ஒரு கோயிலை நாம் மதிக்கவே கூடாது என்பது நமது கருத்து. முற்கூறிய முறைகளைப் பார்க்கிலும், ஒருவருடைய கடவுளை அழிப்பதைப் பார்க்கிலும், அல்லது காப்பாற்றுவதைப்பார்க்கிலும், நாம் மிக உயர்ந்ததாகக் கருதியிருக்கும் கருமம் சாதி வேற்றுமையை அழிப்பதேயாகும்.

## சாதிவேற்றுமையும் தீண்டாமையும்

இதைப்பற்றியே இம் மகாநாடு முக்கியமாகத் தன் கவனத்தைச் செலுத்தும்.

நமது அன்பிற்குரிய தலைவர் திருவாளர் ஈரோடு இராமசாமி அவர்கள் (மலாய் நாட்டிலுள்ள நமது சகோதர சகோதரிகள் விருப்பத்திற் கிணங்கி அங்கு சென்றிருப்பதனால் இங்கு விஜயம் செய்யக்கூடவில்லை) அடிக்கடி இச்சுயமரியாதை இயக்கம் ஓர் புதிய இயக்கம் அன்றெனச் சுட்டிக் காண்பித்திருக்கின்றார். இது மிகத்தொன்மையை உடையது. கௌதம புத்தர் காலத்திற்கு முன்னர் கூட இவ்வியக்கம் வெற்றியுடன் இயங்கி வந்து கொண்டிருந்ததென்றுகூட கூறலாம். சமூகம் உள்ளவரையில் சீர்திருத்தமில்லாமலிருப்பது எங்ஙனம்! சுயமரியாதை இயக்கம் நம்மை வேண்டுவதென்ன? அது நம்மை அறிவுடன் கருணையுடன் உணர்ச்சியுடனிருக்கக் கூறுகின்றது. [illegible]ற் பிரசித்தி பெற்ற மகத்துவமிக்க இந்நியந்தாவின் செல்வப்புதல்வர், இந்தியாவின் தத்துவ அறிவின் இணையிலாப் பெருமையை உலகத்திற்கெடுத்துக்காண்பித்த சுவாமி விவேகானந்தர் இந்நாட்டைப்பற்றி என்ன கூறினார்? கைதிகட்கு அந்தமான் தீவுகள் போலவே இக்கேரள நாடும் பைத்தியக்காரர்கள் நாடாயிருக்கின்றது என்று தெரிவித்தார். இப்பழிச் சொல் நம் நாட்டுக்கேற்பட்டு ஒரு தலைமுறை கூடக் கடந்து விட்டது. ஆனால் இன்றைக்காவது அத்தகைய நிலைமை இங்கு இல்லையென்று நம்மீது சுமத்தப் பெற்ற பழிக்குப்பரிகாரம் தேடிக் கொள்ளக் கூடுமா? தீண்டாமை அகன்றபாடில்லை; ஆனால் அது வளங்கொண்டு முன்னையிலும் அதிகமாகவே பரவி நிற்கின்றது. சென்னபட்டிணத்தில் ஒரு வழக்கு நடைபெற்றபோழ்து வேளாள குலத்துச் சாட்சி ஒருவர் மற்றொரு இழிந்த வேளாள குலத்தினரைத் தொடக்கூட மாட்டேன் என்று தெரிவித்தார். இதைப்பற்றி நீதிபதி சதாசிவ அய்யர்,

"மதக்குற்றம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் இவ்வுணர்ச்சி உண்டாகவில்லை; சாதி உணர்ச்சியின் தீவிரத்தாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது; சாதி உணர்ச்சியை கொஞ்ச காலமாக வகுப்புணர்ச்சியும் பலப்படுத்தி வருகின்றது" என்று கூறியிருக்கின்றார். இந்து சமூக சீர்திருத்தக்காரர்கள் மூடப் பழக்க வழக்கங்களையும், சாதிச் செருக்கையும் சாதித் தடையையும் ஒழித்துவிடவேண்டுமென்றுதொண்டை வரளக் கத்திக் கொண்டிருக்கிற போது இத்திருவிதாங்கூரில் மதப் பிரசாரகர்கள் சிறிது அறிவுடைமையைப் புகுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாம். இதற்குச் சான்றாகப் பண்டுநடைபெற்ற இரண்டொரு நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

## மிஷனெரிகளின் வேலை

மேற்குக் கரையில் உள்ள பெண்கள் தங்கள் அரைக்கு மேற்பாகத்தைத் துணியால் மூடிக் கொள்ளுவது முகமதிய நாகரிகத்தில் ஏற்பட்டதென்று கூறப்படுகிறது. திருவனந்தபுரத்தைக் கைப்பற்றிய ஒரு முஸ்லிம் சர்தார் ஆங்குள்ள 'சூத்திரப் பெண்கள் ஆண்களைப் போலவே உடுத்திக் கொள்ள வேண்டுமென்றும் வடமலையாளத்துப் பெண்களைப்போல் மேலாடையின்றி வெளிச் செல்லலாகாதென்றும் கட்டளை விதித்தார். "சூத்திரர்களில்" உயர்வகுப்புப் பெண்கள் தங்கள் மேற்பாகத்தை அன்று முதல் ஆடையால் மறைத்துக் கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொண்டனர் என்று சரித்திரம் கூறுகின்றது. கீழ்தர "சூத்திரர்கள்" தங்கள் மேற்பாகத்தை மூடிச்செல்லல் கூடாது; மேற்பாகத்தைத் துணிகொண்டு மறைப்பது என்பது தங்கள் விசேட உரிமைதான், என்று உயர்தர சூத்திரர்கள் வற்புறுத்தி வந்தார்கள். மேலாடையால் பல சச்சரவுகள் நேர்ந்தன. தென் திருவிதாங்கூரில் லண்டன் கிறிஸ்தவப் பிரசாரச் சங்கம் ஒன்று வேலை செய்துவந்து, நாஞ்சிநாட்டில் தனது மதத்தைப்பரப்பி நிலைநாட்டியது. நாடார் கிறிஸ்தவப் பெண்கள் உயர்தர சூத்திரப் பெண்களைப் போல் மேலாடை அணியத் துவங்கி விட்டார்கள். இதனைக் கண்ட உயர்தர வகுப்பைச் சார்ந்த நாயர்கட்கும் மற்ற சூத்திரர்கட்கும் கோபம் உதித்து, அவர்கள் பலாத்காரத்தை பிரயோகிக்கலாயினர். சூத்திரர்கள் தெருவில் வரும் மேலாடை தரித்த நாடார் பெண்டிரைத் தாக்கினர். 1858-ல் இச்சச்சரவு மிகவும் முதிர்ந்து விட்டது.

இதன்பேரில் தான் திவான் சர். டி. மாதவராவ் பழக்க வழக்கத்தை மீறக்கூடாதென்றும், இதில் மாறுதல் விரும்பினால் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு சர்க்காரால் இதற்கெனச் சட்டச் சீர்திருத்தம் செய்துகொண்ட பிறகே அவ்வாறுசெய்தல் வேண்டுமென்றும் உத்திரவு போட்டு விட்டார். இவ்வுத்திரவைக்கிறிஸ்தவப்பிரசாரகர் நியாயமானதென்றுகருதவில்லை. திவான் உயர்தர வகுப்பாரை வெளிப்படையாக ஆதரிப்பதாகவே கருதினர். பிறகு, முதலாக மகாராஜாவுக்கும் பின்னர் சென்னை அரசாங்கத்திற்கும் இக்கிறிஸ்தவப் பிரசாரகர்கள் மனுச் செய்து கொண்டனர். இதன் பேரில் அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த சர். சார்லஸ் ட்ரவிலின் என்பவர் பிரிட்டிஷ் ஸ்தானீகருக்கு பின் வருமாறு எழுதினார்:—

"உண்மை, நியாயம், மனித அபிமானம் எல்லாமுமே இதில் சம்பந்தமிருக்கின்றன. இச்சமயம் நாம் உறுதியாக நிற்காவிட்டால் நாகரிக உலகம் நம்மைத் தூற்றும். பிரிட்டிஷ் குடிகட்கும் திருவிதாங்கூரில் எல்லாவிதமான சுதந்திரங்களும் அளிக்கப்படும் என்னும் மகாராஜாவின் விளம்பரத்தைக்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## பெரிய இடத்தில் சுயமரியாதைக் கல்யாணம்

கோவை பிரபல வியாபாரியும் லக்ஷப்பிரபுவுமான உயர் திருவாளர், ஆர். கே. ஷண்முகம், எல். எ. அவர்களால் தமது சகோதரர் திரு. ஆர். கே. ராமகிருஷ்ணன் அவர்களுக்கு சென்ற டிசம்பர் ௴ 12௳ கோயமுத்தூரில் சுயமரியாதைக் கொள்கைப்படி திருமணம் நடந்தது. அதாவது அர்த்தமற்ற சடங்கு இல்லாமலும் ஒரே நாளில் திருமணம் முடிந்தும் பார்ப்பனப் புரோகிதமோ சடங்கோ இல்லாமலும் பார்ப்பன தட்சணையோ பார்ப்பன மரியாதையோ இல்லாமலும் மிக்க சுருக்கமான செலவில் நடந்தேறியது.

## திரு. ராமசாமியின் வருகை.

மலேயாநாட்டு சுற்றுப் பிரயாணத்திலிருந்து, திருவாளர்கள். ஈ. வெ. ராமசாமி, ஸ்ரீமதி நாகம்மாள், எஸ். ராமநாதன், சாமி சிதம்பரனார், பொன்னம்பலனார், சி. நடராஜன், காளியப்பன், முதலானவர்கள் 16—1—30 தேதியன்று மகிழ்ச்சியோடு சுகமே இந்தியாவுக்கு நாகை துறைமுகத்தில் வந்துசேர்ந்தார்கள். 16ந் தேதி மாலை நாகை அவுரித் திடலில் ஒரு வரவேற்பும் 17-௳ மாயவரத்தில் ஒரு வரவேற்பும் பெற்று 18ந் தேதி பகல் ஒரு மணிக்கு திரு. ராமசாமியும் அவரது மனைவியாரும் ஈரோடு வந்து சேர்ந்தார்கள். சுற்றுப் பிரயாணத்தின் விபரங்கள் பின்னால் வெளிவரும்.

## திரு. சௌந்திரபாண்டியர் ராஜீநாமா

சுயமரியாதைச் சங்கத்தின் தலைவர் திரு. சௌந்திரபாண்டியர் டை சங்கத்தின் உபதலைவர் திரு. பன்னீர் செல்வத்தின் தஞ்சைஜில்லா போர்டு தலைவர் தேர்தலுக்கு விரோதமாக மந்திரிகள் வேலை செய்வதால் மந்திரி கட்சியைவிட்டு விலகி விட்டதாய்த் தெரிகிறது.

## மகிழ்ச்சி எய்துகின்றோம்.

திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் உயர் திருவாளர் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் மூன்றும் முறையாக திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு தலைவராய் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப் பட்டதற்கு நாம் மகிழ்ச்சி எய்துகின்றோம்.

## பிழை திருத்தம்.

16-வது பக்கத்தின் முடிவில் திருமதி "கண்ணம்மாளால்," என்றிருப்பதை திருமதி "ஈ. வெ. ரா. நாகம்மாளால்" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும். [ப-ர்]

## ஒரு நற்செய்தி.

திரு. அருணகிரியாரின் மனைவியாராகிய திருமதி. சுந்தரி அம்மையார் அவர்களுக்கு 18-1-30 தேதியன்று சென்னையில் ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாக அறிந்துமகிழ்ச்சியடைகின்றோம்.

## பார்ப்பனீயத்தை ஒழித்த வீரப் பெண்மணி.

ஆதிசைவவேளாளர் என்று சொல்லப்படும் குலத்தில் உதித்த ர. சு. சிவசங்மர முதலியார் என்பவர், தான் உயிர் விடும்போது தனக்குப்பிராமணர் அல்லாதவரைக் கொண்டு சடங்கு செய்ய வேண்டும் என்று தனது அருமை மனைவியாரை வேண்டிக்கொண்டனர். அவ்வண்ணமே அவரது மனைவியார் பாக்கியம் அம்மாள் அவரது இறுதிச் சடங்கை ஓதுவாரைக் கொண்டு செய்ய முன் வந்தபோது அவரது இனத்தவர் அவரை ஜாதிப்பிரஷ்டம் செய்வதாகப் பயமுறுத்தினர். அவ்வினத்தவர் பயமுறுத்தலுக்குச் சிறிதும் அஞ்சாமல் அவ்வம்மையார் அவரது தகப்பனார் காஞ்சீபுரம் பெ. சாமி முதலியார் உதவியாலும் (27—12—29) சுக்கில ஆண்டு மார்கழித்திங்கள் 13-ம் நாளில் சென்னை இராயப்பேட்டை அம்மன் கோயில் குளக்கரையில் தனது கணவனது இறுதிச் சடங்கை செவ்வனே செய்து முடித்தனர். அப்போது பயமுறுத்தின ஆதிசைவவேளாளர்களும் அவரது உறவினரும், நண்பரும் புதுப்பாக்கம் சிவசுப்பிரமணிய பக்தஜன சபையாரும், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையாரும் போந்திருந்தனர். ஆதிசைவ வேளாளர் குலத்தில் பிராமணர்களை நீக்கி ஓதுவாரைக்கொண்டு கருமம் செய்தது இதுவேமுதல் முறையாகும். என்று திரு. சிவசங்கரன் எழுதுகிறார்.

## திரு. குருசாமி-குஞ்சிதம் திருமணம்.



சென்ற டிசம்பர் மாதம் 8-௳யன்று ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதைக் கலப்பு மணத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

இடமிருந்து வலம்:—

நிற்பவர்கள்:—திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, எம். வி. கருப்பண்ண செட்டியார்; ஜே. எஸ். கண்ணப்பர்; டி. சுப்பிரமணிய பிள்ளை; கைவல்ய சாமியார்; கே. வி. அழகிரிசாமி;.

உட்கார்ந்திருப்பவர்கள்:—திருவாளர்கள்; வெங்கிடபதி முதலியார், பி. ஏ; பி. எல்., வி. முத்துரெத்தின கவுண்டர்; எஸ். குருசாமி [மணமகன்]; திருமதி டி. எஸ். குஞ்சிதம் [மணமகள்]; ஸ்ரீமதி எஸ். சகுந்தலா; வெங்கிடாசலம் பிள்ளை.

தரையில்:—திருவாளர்கள்: ச. ம. சி. பரமசிவம்; சாமி [illegible]பானர்; மாசிலாமணி முதலியார்; ஸ்ரீமதி ராமாமிர்தத்தம்மாள்.

## சுங்க குத்தகைகள்.

இராமநாதபுரம் ஜில்லா 1930 31-வருஷத்திய சுங்கங்களின் குத்தகைகளை 1930 ஹு பிப்ரவரி ௴ 8௳ சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மதுரையில் இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஆபீசில் பிரசிடெண்டவர்களால் பகிரங்கமாய் ஏலம் போடப்படும்.

2. ஏல நிபந்தனைகளை இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டாபீஸிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

[ஒப்பம்]

W. P. A. சௌந்தரபாண்டியன், இராமநாதபுரம்.

டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரசிடெண்டு.

## "குடி அரசு" "ரிவோல்ட்"

### சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

நமது "குடி அரசு" "ரிவோல்ட்" பத்திரிக்கைகள் மூன்று வாரங்களுக்கு முன்பே சென்னையினின்றும் இவிடம் மாற்றப்பட்ட போதிலும், கலெக்டராபீசில் பதிவு [டிக்ளரேஷன்] உத்தரவிற்காகப் பல முயற்சிகள் செய்தும், மலேயா சென்றிருந்தவர்கள் திரும்பி வந்தபிறகுதான், அதாவது, திருமதி. நாகம்மாள் அவர்களின் கையெழுத்து அவசியம் என்று ஏற்பட்டுவிட்டதால் மலேயா நாட்டிலிருந்து அவர்கள் வந்தபின்பு தான் பதிவு செய்ய முடிந்ததாலும் மற்றும் அதன் பின்பே போஸ்டல் மேலதிகாரியிடமிருந்தும் உத்திரவு வாங்க வேண்டியிருந்ததாலும் சென்ற வாரமே பேப்பர்கள் அநேகமாய் அடித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவைகளை இவ்வாரத்தில் தான் அனுப்பும்படி நேர்ந்துவிட்டது. இனி அடுத்த வாரமாகிய 2—2—30-உ பத்திரிக்கைகள் தவக்கமன்னியில் அந்தந்தத் தேதியிலேயே வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதுகாறும் எதிர்பாராததும் தடுக்க முடியாததுமான காரணங்களால் பத்திரிக்கைகள் தாமதமானதின் காரணமாக வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு மிகுதியும் வருந்துகின்றோம்.

மானேஜர்.

---

குடி அரசு

ஈரோடு 1930 ஜனவரி மீ 19உ

## நாகர் கோவில் மகாநாடு.

சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவின் கீழ் திருவாங்கூர்சமஸ்தானத்தைச் சேர்ந்த நாகர் கோவிலில் டிசம்பர் 27, 28 ல் கூடிய அகில திருவாங்கூர் சமுதாயச் சீர்திருத்த மகாநாட்டின் சுருக்கமான நடவடிக்கைகளை மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். இம்மகாநாட்டைப் பற்றி எழுத ஆரம்பிக்குமுன், நாம் அதற்குப் போகக்கூடாமல் போனதற்காக நமது சமாதானத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். இம்மகாநாட்டை நடத்துவதற்காக மாதக்கணக்காய் பெரு முயற்சி எடுத்து ஏற்பாடு செய்து வந்த திருவாளர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல். அவர்களின் விருப்பத்திற்கிணங்க நாமும் வருவதாக ஒப்புக் கொண்டதோடு, நமது சவுகரியத்தைஉத்தேசித்தே மகாநாடும் 2, 3 தடவை ஒத்தி வைக்கப்பட்டதாயினும், திடீரென்று எதிர்பாராமல் மலேயா நாட்டிலிருக்கும் நமது சகோதரர்கள் பெருஞ் செலவில் ஒரு மகாநாட்டைநடத்துவதாக ஏற்பாடு செய்துகொண்டதோடு, நமது சுற்றுப் பிரயாணத்தைப்பற்றிய நீண்ட அறிக்கையையும் வெளியிட்டு விட்டு, நமக்கு அவசரமாக உடனே புறப்படுமாறு தந்திச் செய்தி அனுப்பி விட்டதால், தள்ள முடியாத நிலையில் நாம் அவர்களைத் திருப்தி செய்யும் பொருட்டும், நமது திருவாங்கூர் சகோதர சகோதரிகளுக்கு நமது நிலைமையைச் சொல்லிக் கொள்ளலாமென்ற எண்ணத்தினும் உடனே புறப்பட்டுப் போகும்படி நேர்ந்து விட்டது. ஆகையால், நாகர் கோவில் மகாநாட்டில் நாம் கலந்து கொள்ள வேண்டிய நல்ல சந்தர்ப்பத்தை இழக்க நேர்ந்தமைக்காக மிகுதியும் வருந்துகிறோம். நிற்க.

நாகர் கோவிலில் நடந்த வரவேற்புத் தலைவர் உபந்நியாசத்தையும் நடவடிக்கைகளையும் நாம் படித்துப் பார்த்த வரையில், இந்தியாவில், சிறப்பாக இந்து சமூகம் என்பதில் ஏதாவது சிறிது சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களுக்கு முதலாவதாக வேலை செய்ய வேண்டிய இடம் சுதேச சமஸ்தானங்களே ஒழிய பிரிட்டிஷ் அரசாங்கமுள்ள இடமல்ல, என்றும் அதிலும் முதல் முதலாகச் செய்ய வேண்டிய இடம், சுவாமி விவேகானந்தரால் "பைத்தியக்காரர் நாடு" என்று சொல்லப்பட்ட மலையாள ராஜ்ஜியமாகிய திருவாங்கூர் சமஸ்தானமென்பதே நமது அபிப்பிராயமாகும். ஏனெனில், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடக்கும் மனிதத்தன்மையற்ற சமூகக் கொடுமைகளைப்பற்றியும், அவ்விடத்திய ராஜாங்கம் எவ்விதம் "ராமராஜ்யமாகவே" இன்றும் இருந்து வருகிறது என்பதைப் பற்றியும், பார்ப்பன ஆதிக்கம் எவ்வளவு தூரம் அரசாங்க உதவியோடு செலுத்தப்பட்டு வருகிறது என்பதைப்பற்றியும் நாம் அடிக்கடி எழுதிவந்திருப்பதுடன் மகாநாட்டு நடவடிக்கைகளாலும் வாசகர்கள் அறிந்திருக்கலாம். இந்த நிலையில் இப்போது நடந்த மகாநாடானது எவ்வளவு முக்கியமும் அவசியமுமானது என்பதை நாம் அதிகமாய் வலியுறுத்தவேண்டியதில்லை என்றே நினைக்கிறோம்.

மேற்படி மகாநாட்டின் நடவடிக்கைகளில் முதலாவதாக வரவேற்புத் தலைவர், திருவாளர் பி. சிதம்பரம் அவர்களின் பிரசங்கத்தைப்பற்றி சிறிது எடுத்துக் கூறவேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது. அவர்களது பிரசங்கத்தினின்றும் இதுவரையில் பலர் அறிந்திருக்க முடியாத சில ரகசியங்களும் சில உண்மைகளும் வெளியாகியிருக்கின்றன. நாகரீக உலகம் ஏளனம் செய்யக்கூடியதும், பகுத்தறிவுடைய எந்த மனிதனும் வெறுக்கக்கூடியதுமான பல செய்திகளுக்கு திருவாங்கூர் சமஸ்தானம் காரணமாக இருக்கிறது என்பது அப்பிரசங்கத்திலிருந்து அறியக் கிடக்கின்றது. உதாரணமாக, பெண்கள் தங்கள் அரையின் மேல் பாகத்தைத் துணியால் மூடிக்கொள்வதைப்பற்றி எழுதியிருப்பதைக் கவனித்து வாசிப்போருக்கு, திருவாங்கூர் சமஸ்தானத்தின் சமூக ஊழல்கள் நன்கு விளங்காமற்போகாது. அதாவது,

"மேற்குக் கரையிலுள்ள பெண்கள் தங்கள் அரைக்கு மேற்பாகத்தைத் துணியால் மூடிக்கொள்வது முகம்மதிய நாகரீகத்தில் ஏற்பட்டதென்று கூறப்படுகின்றது. திருவனந்தபுரத்தைக் கைப்பற்ற ஒரு முஸ்லிம் சர்தார் ஆங்குள்ள 'சூத்திரப் பெண்கள் ஆண்களைப்போலவே உடுத்திக்கொள்ளவேண்டுமென்றும் வடமலையாளத்துப் பெண்களைப்போல் மேலாடையின்றி வெளிச் செல்லலாகாதென்றும் கட்டளை விதித்தார். "சூத்திரர்களில்" உயர்வகுப்புப் பெண்கள் தங்கள் மேற்பாகத்தை அன்று முதல் ஆடையால் மறைத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொண்டனர் என்று சரித்திரம் கூறுகின்றது. கீழ்தர "சூத்திரர்கள்" தங்கள் மேற்பாகத்தை மூடிச்செல்லல் கூடாது; மேற்பாகத்தைத் துணிகொண்டு மறைத்துக்கொள்ள தங்களுக்குமாத்திரம் தான் உரிமையுண்டு என்று உயர்தர "சூத்திரர்கள்" வற்புறுத்தி வந்தார்கள். மேலாடையால் பல சச்சரவுகள் நேர்ந்தன. தென் திருவிதாங்கூரில் லண்டன் கிறிஸ்தவப் பிரசாரச் சங்கம் ஒன்று வேலை செய்து வந்து, நாஞ்சிநாட்டில் தனது மதத்தைப் பரப்பி நிலைநாட்டியது. நாடார் கிறிஸ்தவப் பெண்கள் உயர்தர "சூத்திரப்" பெண்களைப் போல் மேலாடை அணியத்துவங்கி விட்டார்கள். இதனைக்கண்ட உயர்தர வகுப்பைச் சார்ந்த நாயர்கட்கும் மற்ற "சூத்திரர்" கட்கும் கோபம் உதித்தது. அவர்கள் பலாத்காரத்தை பிரயோகிக்கலாயினர். "சூத்திரர்கள்" தெருவில் வரும் மேலாடை தரித்த நாடார் பெண்டிரைத் தாக்கினர். 1858-ல் இச்சச்சரவு மிகவும் முதிர்ந்து விட்டது.

திரு. சிதம்பரம் அவர்கள் பின்னும் விளக்கமாகக் கூறுகிறதாவது:—

"இதன் பேரில் தான் திவான் சர். டி. மாதவராவ் பழக்க வழக்கத்தை மீறக்கூடாதென்றும், இதில் மாறுதல் விரும்பினால் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு சர்க்காரால் இதற்கெனச் சட்டச் சீர்திருத்தம் செய்துகொண்ட பிறகே அவ்வாறு செய்தல் வேண்டுமென்றும் உத்திரவு போட்டு விட்டார். இவ்வுத்திரவைக் கிறிஸ்தவப் பிரசாரகர் நியாயமானதென்று கருதவில்லை. திவான் உயர்தர வகுப்பாரை வெளிப்படையாக ஆதரிப்பதாகவே கருதினர். பிறகு, முதலாக மகாராஜாவுக்கும் பின்னர் சென்னை அரசாங்கத்திற்கும் இக்கிறிஸ்தவப்பிரசாரகர்கள் மனுச் செய்து கொண்டனர். இதன்பேரில் அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த சர். சார்லஸ் டிரவிலின் என்பவர் பிரிட்டிஷ் ஸ்தானீகருக்கு பின்வருமாறு எழுதினார்:—

"உண்மை, நியாயம், மனித அபிமானம் எல்லாமுமே இதில் சம்புரமிருக்கின்றன. இச்சமயம் நாம் உறுதியாக நிற்காவிட்டால் நாகரீக உலகம் நம்மைத் தூற்றும். பிரிட்டிஷ் குடிகட்கும் திருவிதாங்கூரில் எல்லாவிதமான சுதந்திரங்களும் அளிக்கப்படும் என்னும் மகாராஜாவின் விளம்பரத்தைக் கொண்டே ஒரு வகுப்பினரை மிகவும் கொடுமையாக நடத்த சூழ்ச்சி செய்யப்படுகிறது. நீர் இந்தக்காலத்திற்கு இது ஏற்றதல்லவென்றும் ஒரு அறிவுடைய சிற்றரசர் இவ்வாறு செய்தல் கூடாதென்றும் அவருக்கு எடுத்துரைப்பீராக."

இதன் பேரில் ஸ்தானீகர் மகாராஜாவை வற்புறுத்தி, மகாராஜா மீண்டும் ஓர் விளம்பரமூலமாக மேலாடை தரித்துக்கொள்ளுவதில் எல்லோருக்கும் சுயேச்சை உண்டென்றும், ஆனால் கீழ்தர வகுப்பினர் உயர்தரப்பெண்களைப் போலவே மேலாடை தரிக்கலாகாது என்றும், பிரசுரம் செய்தார். இதுவே இன்றுவரை திருவிதாங்

கூரில் சட்டம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.''

இவ்விதமாக, உடை யணிவதில் கூட சாதி உயர்வு தாழ்வு பாராட்டிவரும் திருவாங்கூர் சமஸ்தானத்தை சுவாமி விவேகானந்தர் "பைத்தியக்காரர் வாழும் நாடு" என்று சொன்னதில் ஏதாவது ஆச்சரிய மிருக்கிறதா என்று கேட்கிறோம்? இதர இடங்களில் இருப்பதைப் போலவே, திருவாங்கூரிலும் பார்ப்பனர்களையன்றி சாதி இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் எவ்வளவு கொடுமையாகவும் மன இரக்கமின்றியும் நடந்து கொள்கிறார்கள் என்பதையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். "இந்து மதத்தில் உண்மையாக அக்கரை இருப்பவர்களோ, அல்லது இந்துக்களின் ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும் கவலை யிருப்பவர்களோ, அல்லது "இந்து மதத்தை" க் காப்பாற்றுவதற்காக இருப்பதாகச் சொல்லப்படும் கொள்ளைக் கூட்டத்தாரைப் போன்ற சங்கராச்சாரிகளோ, ஜீயர்களோ, மடாதிபதிகளோ, பண்டார சன்னிதிகளோ தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் மனிதத்தன்மை இல்லாமல் கொடுமையாகவும் காட்டுமிராண்டித் தன்மையாகவும் நடந்துகொள்கிறார்களே யன்றி சிறிதாவது மனிதத் தன்மையோடு நடக்கிறார்களா வென்று நமது வாசகர்களைக் கேட்கிறோம். இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவோ ஆயிர வருஷங்களாக எவ்வளவோ கொடுமைகளை அநுபவித்துக் கொண்டு "இந்து" மதத்திலிருந்து வந்துங் கூட, கிறிஸ்துவ மிஷனெரிகள் என்பவர்களும் மகம்மதியர்களும் இல்லாவிட்டால் இப்போதிருக்கும் இந்த நிலைமையைக் கூட அடைந்திருக்க மாட்டார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் கிறிஸ்துவ மதத்திலுங்கூட சாதி வித்தியாசம் பாராட்டப் பட்டு வருகிறது ஒரு அளவுக்கு உண்மையே யாயினும், "இந்து" மதத்திலிருக்கும் கொடுமையிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை விடுவித்து அவர்களையும் மனிதர்களாக ஆக்கிவிட்ட பெருமை முற்றிலும் கிறிஸ்துவர்களையும் மகமதியர்களையுமே சாருமென்பதை ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது. இது சம்மந்தமாக சரித்திரக்காரர்கள் எழுதிவைத்திருக்கும் பல உண்மைகளையும், எப்படி திருவாங்கூர் சமஸ்தானம் முற்றிலும் பார்ப்பனர்களுடைய வாழ்விற்காகவே இருந்து வருகிறது என்பதையும் திருவாளர் சிதம்பரம் அவர்கள் புள்ளி விவரங்களோடு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

பிறகு இரண்டாவதாக, மகாநாட்டுத் தலைவர் சொற்பெருக்கிலும் சில அரிய விஷயங்கள் வெளியாகி இருக்கின்றன. "சுயமரியாதை இயக்கம் என்ன வென்பதையும், அதன் தத்துவம், லட்சியம் முதலியவைகளைப் பற்றியும் எப்படி இது முற்றிலும் ஒரு புதிய இயக்கம் அல்ல வென்பதைப்பற்றியும், எப்படி பார்ப்பனர்கள் எவ் வகையான சீர்திருத்தத்திற்கும் எந்தக் காலத்திலும் எதிரிகளாகவே இருந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும், உண்மையான "கடவுள்" "உண்மையான கோவில்" இவைகள் எது என்பதைப்பற்றியும், சுயமரியாதை இயக்கம் என்பது முற்றிலும் பகுத்தறிவு இயக்கமே தவிர வேறல்ல என்பதைப்பற்றியும், சமூகக் கொடுமை நிறைந்து சாதி வேற்றுமையும் தீண்டாமையும் தலைவிரித்தாடும் திருவாங்கூர் ராஜ்யத்திற்கு, எப்படி சுயமரியாதை இயக்கம்மிகவும்அவசியம் என்பதைப்பற்றியும் தலைவர் திரு. திவான் பகதூர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் வெகு தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக் காண்பித்திருக்கிறார்.

கடைசியாகமகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றியும் நமது அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறோம். தீண்டாமையை ஒழிப்பதற்காக கோவில் முதலிய பொது ஸ்தாபனங்களில் இந்துக்களெனப் படுவோர்கள் எல்லாரையும் அநுமதிக்கப்பட வேண்டியதற்காக பொது ஜன அபிப்பிராயத்தைப் பலப் படுத்துவதன் பொருட்டு பல பெரியோர்கள் சேர்ந்த ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருப்பதுடன் அதையே அரசாங்கம் மூலமாய் அமுலுக்குக் கொண்டு வருவதற்காக திருவாங்கூர் சட்ட சபையிலும் ஒரு மசோதாக் கொண்டுவருவதாகத் தீர்மானித்திருப்பதை நாம் பெரிதும் போற்றுகின்றோம். எப்படி, பெண்களின் கல்யாண வயதை உயர்த்துவதற்காகப் பல வருஷங்களாக, பல பெரியோர்கள் முயற்சி செய்தும், அது சமீபத்தில் சட்டமாகச் செய்யப்பட்ட பின்பே, அது நடைமுறையில் வருவதற்கு மார்க்கம் ஏற்பட்டிருக்கிறதோ, அதுபோலவே, தீண்டப்படாதார் விஷயத்திலும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் பல சீர்திருத்தக்காரர்கள் முயற்சி செய்தும் இன்றுவரை ஒரு பலனையும் அளித்ததாக நாம் பார்க்கமுடியவில்லை யாதலால், அது சம்மந்தமாக உடனே சட்டம் செய்தாலன்றி பார்ப்பனர்களுக்கும் ஜாதிஇந்துக்களுக்கும் சற்றுவது இரக்க புத்தியோ நல்லறிவோ வாராதென்று உறுதியாய்க் கூறுவோம்.

தவிர, குற்றங்களுக்கு தண்டனை விதிக்கும் பீனல் கோடில் கொலைக்குற்றம் செய்தால் மற்றவர்களைத் தண்டிப்பதுபோலவே பார்ப்பனர்களையும் தண்டிக்க வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில், பார்ப்பனர்கள் யாரைக் கொன்றாலும் எத்தனை பேர்களைக் கொன்றாலும் மற்றவர்களைப் போல் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது என்பதாக இப்போது திருவாங்கூரில் சட்ட மிருக்கின்றது. ஏனெனில மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ளபடி திருவாங்கூர் ராஜ்யம் அரசாளப் படுவதால் இம்மாதிரியான சட்டம் அங்கு இருக்க வேண்டியிருக்கிறது. இதனால் திருவாங்கூரில் பார்ப்பனர்கள் யாரைக் கொலை செய்தாலும் செய்யலாம். ஆனதால், அம்மாதிரி இனி நடவாமல் இருக்கும்படி கொலைக்குற்றம்செய்தால் பார்ப்பனராயிருந்தாலும் மற்றவர்களுக்கு விதிப்பது போல் மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. இது சுயமரியாதையை உத்தேசித்து அவசியம் செய்து தீர வேண்டியதாகும். தவிர, பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடவும் முறைஜெபம் (அரசருக்கு பிராமணனைக் கொன்ற தோஷம் தீர என்று) செய்யவும், திருவாங்கூர் ராஜ்யத்தின் பணத்தை செலவழிக்கக் கூடாது என்கின்ற தீர்மானம் மற்றெல்லாவற்றையும் விட முக்கியமான தீர்மானமாகும். ஏனெனில், இதே ராஜாங்கத்தில்இரண்டு நாளைக்கு ஒரு வேளை கஞ்சி இல்லாமலும் தொழில் இல்லாமலும் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி மடியவும், நாட்டை விட்டுக் கூலிகளாக கடல் கடந்து ஓடவும் மானக் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது பார்ப்பான் என்று பிறந்தவர்களுக்கெல்லாம் தினப்படி அரசாங்கப்பணத்தில் மூன்று வேளை வெட்டிச் சாப்பாடும் ஐம்பத்தாறு நாளில் எட்டு லட்ச ரூபாய் பாழாகும்படியான முறை ஜெபமும் ("வைதீகச்சடங்கும்") ஒரு அரசாங்கம் செய்வதென்றால் அதுஎவ்வளவு காட்டுமிராண்டித்தனமும் முட்டாள்தனமுமான காரியமுமாய் இருக்கும் என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம்.

ஆகவே, திருவாங்கூரில் கூடிய சீர்திருத்த மகாநாடானது மிகவும் அவசியமும் முக்கியமுமான தென்பதைப்பற்றியும் அது மிகவும் அவசியமான தீர்மானங்களைச்செய்தது பாராட்டற்குறியது என்பதும் மகாநாட்டின் வேகத்தை அநுசரித்து இப்போது அங்கு ஏற்பட்டிருக்கும் கோவில் பகிஷ்கார நடவடிக்கையாலும் தெரிந்து கொள்ளலாம்.

கடைசியாக, இவ்வளவுக்கும் காரணமாயிருந்தது உயர்திருவாளர் பி. சிதம்பரம் அவர்களுடையவும் அவர்களது உண்மை நண்பர்களுடையவும் முயற்சியும் ஊக்கமும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

---

## தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் இம்மாதம் 27 உ நடைபெறக்கூடும் என்று தெரிய வருகின்றது. அத்தேர்தலில்நமது நண்பரும் சுயமரியாதை இயக்க சங்கத்தின் உபதலைவருமான ராவ் பகதூர். உயர்திரு. எ. டி. பன்னீர் செல்வம் அவர்களே அநேகமாய் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் படுவார் என்றே எதிர்பார்க்கின்றோம். ஆயினும் அவரது வெற்றிக்கு விரோதமாய் ஒரு உணர்ச்சி மிக்கமுயற்சியாய் வேலை செய்து வருவதாயும் தெரிய வருகின்றது. திரு. செல்வம் அவர்கள் வெற்றிக்கு விரோதமாய் வேலை செய்கின்ற உணர்ச்சிக்கு நியாயமான தகுந்த காரணங்கள் ஏதாவது இருந்தாலும் இருக்கலாம். ஆயினும் நாம் திரு. செல்வம் அவர்கள் வெற்றியையே மனமொழிமெய்களால்கோர வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். ஏனெனில், பொதுவாக தஞ்சை ஜில்லா பொது மக்களை பொருத்த வரையிலும், குறிப்பாக பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொருத்தவரையிலும், சிறப்பாக சுயமரியாதை இயக்கத்தின் நன்மையைப் பொருத்தவரையிலும் திரு. எ. டி. பன்னீர் செல்வம் அவர்களே தஞ்சை ஜில்லா போர்டுக்கு இது சமயம் மறுபடியும் தலைவராக

தெரிந்தெடுக்கப்பட வேண்டியது அவசியமானதென்பதே நமது அபிப்பிராயமாகும். அன்றியும், இந்த அபிப்பிராயத்தையே தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கொண்ட சில செல்வவந்தர்களும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் கொண்டுள்ளார்கள்.

தவிர, பார்ப்பனரல்லாதசமூகப் பிரமுகர்களில் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளப் பட்டபொருப்பும்நாணயமும்அற்ற சிலர் தங்கள் சுயநலம் காரணமாக ஒருவரை ஒருவர் கெடுக்க எண்ணியதும் அதனால் ஒருவருக்கொருவர் தற்காப்பிற்கு பத்திரங்கள் தேடிக் கொள்ள ஏற்பட்டதுமான காரியங்களால் இனிதென்னாட்டில் நடந்தேறும் ஒவ்வொரு தேர்தல்களிலும் நியமனங்களிலும் இவ்விதமான எதிர்ப்புகளையும் தொல்லைகளையும் எதிர்பார்த்துத் தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதைக் குறித்து நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. அன்றியும் இந்நிலைமை காரணமாக பார்ப்பன ஆதிக்கத்தை மறுபடியும் வளர்க்க ஒருவருக்கொருவர் போட்டிபோடுவதைப் பார்த்து நாம் வெட்கப் படாமலிருக்கவும் முடியவில்லை.

நெல்லூர் மகாநாடானது எப்படியோ நமக்கு இந்நிலைமையை அளித்து விட்டது. நம்மைப் பொருத்தவரை பார்ப்பனரல்லாத சமூகத்திற்குள் ஜஸ்டிஸ் கட்சி என்பவர்களிடமிருந்தாவது அதற்குள் ஏற்பட்ட உள் கட்சியாகிய ஒழுங்கு முறைக்கு உட்பட்ட ஜஸ்டிஸ் கட்சியார் என்பவரிடமிருந்தாவது மந்திரி கட்சியாரிடமிருந்தாவது மற்றும் இவைகளின் சார்புக் கட்சியாரிடமிருந்தாவது அவரவர்கள் கட்சிக் கொள்கைகள்முழுமையுமோ, அல்லது, அதிலுள்ளவர்களின் நடத்தைகள் முழுவதையுமோ அடியோடு ஒப்புக்கொண்டு நாம் அதில் கலந்திருக்கவில்லை என்பதையும், அல்லது வேறு எந்த விதமானசுய நல லட்சியத்தைக் கொண்டோ அல்லது யாருக்காவதுபயந்தோநாம் அவற்றைஆதரிக்கவில்லைஎன்பதையும்தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால்நமது சுயமரியாதைக்கொள்கைகளுக்கு மற்ற கட்சியார்மற்ற ஸ்தாபனங்கள் ஆகியவைகளை விட இவைகள் எத்தனையோ மடங்கு மேலானது என்பதாகவும் வசதி உள்ளது என்பதாகவும் கருதி நமது இயக்கத்தின் நன்மையை உத்தேசித்தே நாம் அவற்றில் களங்கமறக் கலந்திருந்ததுடன் கூடுமானவரை ஒத்துழைத்தும் வந்தோம். எனவே, இந்த முறையில் தான் தஞ்சை ஜில்லா போர்டு தலைமைப் பதவியானது திரு பன்னீர் செல்வம்கையைவிட்டுப் போக நேருமானால், கண்டிப்பாய் அது பார்ப்பன ஆதிக்கத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுமே அல்லாமல் மற்றப்படி அதற்கு இடையில் வேறு இடமில்லை என்றுகருதுவதுடன் திரு. பன்னீர் செல்வம் தோல்வியானதுபார்ப்பனரல்லாத மக்கள் தோல்வியாகுமென்றும் கருதுகின்றோம்.

---

## ஈரோடு கோவில் நுழைவு வழக்குத் தீர்ப்பு.

சுமார் 9 மாதங்கட்குமுன்பு ஆரம்பித்து நடந்துவந்த ஈரோட்டு கோவில் நுழைவு வழக்கில் ஜனவரி 22-ம் தேதியன்று சப்மாஜிஸ்ட்ரேட் அவர்களால் தீர்ப்புச்சொல்லப் பட்டது. அதாவது:—

திருவாளர்கள்: ஈஸ்வரன் பசுபதி, கருப்பன் முதலியமூன்று பேர்கள் மீதும் இ. பி. கோ. 295, 297-வது செக்ஷன்கள்படி குற்றஞ்சாட்டப்பட்டு அதற்காக ஒவ்வொருவருக்கும் 60ரூ. வீதம் அபராதமும், தவறினால் 2-மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது, இதில் 2, 3 எதிரிகள் அபராதத்தைச்செலுத்தி விட்டார்கள். முதலாவது எதிரி, திருவாளர் ஈஸ்வரன் அவர்கள் அபராதத்தைக் கொடுக்கமறுத்து இரண்டுமாத கடுங்காவலை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்.

திரு. ஈஸ்வரன் அவர்களுக்கு திரு. பி. வரதராஜுலு நாயுடு அவர்களிடமிருந்து "மனமாரப் பாராட்டுகிறேன். உங்களது ஜெயில் வாசம் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு அஸ்திவாரம் போடப்பட்டதாகும்" என்று ஒரு தந்தியும் கிடைத்திருக்கிறது. மற்றும் பலருடைய பாராட்டுச் செய்திகளும் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

---

## ஈரோட்டில் சுயமரியாதை மகாநாடு.

ஈரோட்டில் மாகாண சுயமரியாதை இரண்டாவது மகாநாட்டை அடுத்த மார்ச்சு மாத வாக்கில் நடத்த வேண்டிய ஏற்பாடுகள் துவக்கப்பட்டுவிட்டன. இது சம்பந்தமாய் நமக்கு எழுதி ஊக்க மூட்டிய நண்பர்களுக்கு நமது வணக்கம்.

(ப—ர்)

## திருமதி மரகதவல்லியார்.

தேவகோட்டை தாலூக்கா போர்ட் மெம்பராகிய திருமதி மு. மரகதவல்லி அம்மையார் அவர்கள் காரைக்குடி முனிசிபாலிட்டிக்கு ஒரு கவுன்சிலராக நியமனம் பெற்ற சங்கதி கேட்டு மிகுதியும் மகிழ்ச்சி அடைவதுடன் தாலூகா போர்ட் மெம்பராய் நியமனம்செய்த உயர் திரு. சௌந்திரபாண்டியர்அவர்களையும் கவுன்சிலராய் நியமனம் செய்த முதல் மந்திரி அவர்களையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

---

[12-ம் பக்கத்தொடர்ச்சி)

விஷயங்களில் எங்களிலும் அதிகந் தாழ்ந்து காணப்படுகின்றீர்கள். கல்விப் பயிற்சியில் உங்களை ஒத்தார் உயர்ந்தார் இவ்விந்தியாவில் இலர். மற்றைய பாகங்களில் வாயளவில் கூறப்படுவனவற்றை நீங்கள் செய்கையில் கையாண்டு வருகின்றீர்கள்.

ஆனால் உங்கள் சமூகத்தில் ஒரு பெரும் குறை உளது. சாதி வேற்றுமை இந்தியாவிற்கே ஒரு பெரும் தீமைதான். ஆனால், இத்தீமை உங்கள் சமத்தானத்தில் கொழுத்திருப்பதுபோல் வேறெங்கும் காண்டல் அரிது. ஒரு வைதீக இந்து அரசர் இதில் தலையிடத் தயங்குவார்தான். சீர்திருத்த உணர்ச்சி சமூகத்தில் பெரிதும் பரவினாலன்றி சட்டமூலமாகவே சமூக சீர்திருத்தத்தை, அநுசரிக்க முடியாது. இருந்தாலும் கிணற்றுத் தவளைகள் [குறுகிய நோக்கம் படைத்தவர்கள்] வசித்து வருகின்றார்கள் என்பது உறுதி. மேலும் புரோகிதர்களின் வலையிற் சிக்கியிருந்த முதியவர்களும் நாளுக்குநாள் கட்டறுத்துக்கொண்டு வெளியேறுகின்றார்கள். சுவாமி விவேகானந்தர் உங்கள் நாட்டைப் பழித்துரைக்கக் காரணமாயிருந்த இத்தீமையை நீங்கள் உடனே அகற்றி, அப் பழியையும் நீங்கள நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும். எனவே நீங்கள், ஏனைய துறைகளில் எவ்வாறு இந்தியாவின் பிற பாகங்கட்கு வழி காட்டிகளாய் இருக்கின்றீர்களோ, அதுபோலவே, இத்துறையிலும் இனி நீங்கள் வழிகாட்டிகளாய் இருப்பீர்களென்று நான் நிச்சயமாய் நம்புகின்றேன். அப்படியானாற்றான், எதிர்பார்த்த முழு நலனும் இந்தியாவுக்கு ஏற்படும். அப்பொழுது தான் பூலோக சொர்க்கம் என்று கூறப்படும் இந்தியாவும் அப் பெருமைக்கு உண்மையில் இசைந்த நாடாகும். (தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.)

## நோட்டீஸ்.

1930-31 ம் வருஷத்திற்கு கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தாருக்குச் சொந்தமான மார்க்கெட்டுகள், வண்டிப்பேட்டை முதலியவைகளின் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதை 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ம் தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கும் சுங்கக் கேட்டுகளில் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதையை மட்டும் 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கும் கோயமுத்தூர் விக்டோரியா டவுன் ஹாலில் முனிசிபல் சங்கத்தாரின் ஸ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் போடப்படும்.

முனிசிபல் ஆபீஸ்,
கோயமுத்தூர்
20—1—1930

(Sd)

சி. எஸ். இரத்தினசபாபதி,
சேர்மன்.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்க பெருநிதிச் சீட்டு.

## (Lottery)

## அறிக்கை.

சுமார் பதினையாயிரம் சீட்டுகள் வரையில் வெளியில் தங்கியிருப்பதாலும், விற்கப்பட்ட சீட்டுகள் வெளியிலிருக்கும்போது சீட்டுப் போடுவது முறையல்லவாதலாலும் குறிப்பிட்டபடி 18—1—30-ல் சீட்டுக் குலுக்குவதை நிறுத்திக் கணக்கு முடிப்பதற்கு 15—3—30 வரையில் நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை 15—3—30க்குள் சீட்டு விற்பனை செய்பவர்கள் சீட்டுப் புத்தகங்களையும், விற்பனைத் தொகைகளையும் கணக்குடன் தவறாது அனுப்பவேண்டியது. மேற்படி நாளைக்குள், போதிய அளவு முன்னரே விற்கப்பட்ட சீட்டுகள் வந்து சேர்ந்தால், 15—3—30 லாவது, அதற்கு முன்னராவது சீட்டுக் குலுக்கப்படும். சீட்டுப் போடும் நாளை பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

நா. கந்தசாமிப் பிள்ளை,
(Retired Engineer)
சீட்டின் தலைவர்.


மேயோ கூற்று
மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. எ. அய்யாமுத்து,
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே ஒரு வகுப்பினரை மிகவும் கொடுமையாக நடத்த சூழ்ச்சி செய்யப்படுகிறது. நீர் இந்த காலத்திற்கு இது ஏற்றதல்லவென்றும் ஒரு அறிவுடைய சிற்றரசர் இவ்வாறு செய்தல் கூடாதென்றும் அவருக்கு எடுத்துரைப்பீராக.''

இதன் பேரில் ஸ்தானீகர் மகாராஜாவை வற்புறுத்தி, மகாராஜா மீண்டும் ஓர் விளம்பர மூலமாக மேலாடை தரித்துக் கொள்ளுவதில் எல்லோருக்கும் சுயேச்சை உண்டென்றும், ஆனால் கீழ்தர வகுப்பினர் உயர்தரப்பெண்களைப் போலவே மேலாடை தரிக்கலாகாது என்றும், பிரசுரம்செய்தார். இதுவே இன்றுவரை திருவிதாங்கூரில் சட்டம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### நாடார் இந்துக்கள்.

நாடார் கிறிஸ்தவர்களின் மனித உரிமைகட்காக மட்டுமன்றி வெள்ளைக் கிறிஸ்தவப் பிரசாரகர்களே நாடார் இந்துக்களின் அடிப்படையான உரிமைகட்கும் பாடுபடலாயினர். கிறிஸ்தவ நாடார்ப் பெண்டிராயினும் ஒரு உடை கொண்டு தம் உடம்பை மறைத்துக் கொள்ளலாம். கிறிஸ்தவர்களாக மாறாத நாடார்ப் பெண்டிர் இவ்வுரிமைகட்கு இலக்கானவர்களல்ல. இதன் பேரில் இந்து நாடார்கள் கிறிஸ்தவர்களாகாமலேயே தம் பெண்டிருக்கும் மேலாடை தரிக்கும் உரிமை அளிக்கப்படவேண்டுமென வற்புறுத்தினார்கள். ஆனால் இப்போராட்டத்தை வெள்ளைக் கிறிஸ்தவப் பிரசாரகர்களே ஏற்றுக்கொண்டு வழக்கை பிரிட்டிஷ் அரசாங்கம் வரையிற் கொண்டு போய், கிறிஸ்தவர்கட்கும் இந்துக்கட்கும் வெற்றியளித்தனர்.

### திருவிதாங்கூர் சாதி இந்துக்கள்

"சாதி வகுப்பு வேற்றுமைகளும், சாதிக்குள் சாதி, வகுப்புக்குள் வகுப்பு இத்தகைய வேற்றுமைகளுமே இந்நிலைமைக்குக் காரணங்கள். கீழ்தர வகுப்பினர் மத மாற்றத்தினால் ஒன்றையும் இழக்கப்போவதில்லை. சாதகத்தையே அடைவார்கள. இவ்வாறாக நாளுக்கு நாள் இந்து சமூகம் தொகையில் அவசியம் குறைந்தே தீரும். தாழ்த்தப்பட்ட புறக்கணிக்கப்பட்ட வகுப்பினர் அனைவரும் ஒரு காலத்தில் கிறிஸ்தவ மதம் சார்வது திண்ணம்'' என்று ஒரு சரித்திரக்காரர் எழுதுகின்றார்.

"ஒரு சாதிபேதமற்ற வெள்ளையர் செய்யும் உபகாரத்தை ஒரு தென்னாட்டுப்பார்ப்பனன் தாழ்த்தப்பட்ட மக்கட்குச் செய்ய மாட்டான். உதாரணமாக, இவ்விந்தியா முழுதும் பார்ப்பனர்களுக்குத் தர்மசாலைகள் இருக்கின்றனவே, தவிர,ஒருசண்டாளர்க்கு எங்காயினும் ஒரு சத்திரம் சாவடி உண்டா? ஏழைகள், தாழ்ந்தவர்கள், தூய்மையற்ற இடங்களில் வசிப்பவர்களிடத்தில் சமமாகச் சென்று தாழ்ந்தோரை மேலேற்றும் பெருமை வெள்ளையர்களுடையாதேயாகும். பார்ப்பனர்,சாதி இந்துக்கள் சிறிதும் முயற்சித்ததாய் எனக்குத் தெரியவில்லை'' என்று அச் சரித்திரத்தில் காணப்படுகின்றது. இப்பார்ப்பனரின் கூற்று முற்றிலும் உண்மையே. இது ஒவ்வொரு இந்து கோயிற் சுவர்களிலும் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டுமென்பது என் கருத்து. 1901-ல் எடுத்த ஜனத்தொகை கணக்கின்படி கிறிஸ்தவர்கள் இந்நாட்டில் 8 லட்சம் பேர்களே இருந்தனர். இன்று அவர்கள் 14 லட்சம் பேர்களிருக்கின்றனர். நூற்றுக்கு 24 பேர்களாய் இருந்த கிறிஸ்தவர்கள் இன்று 35 பேர்களாக அதிகரித்துக் காணப்படுகின்றனர். இந்துக்கள் இவ்வாறு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வர, இவ்விந்து மதம் இச்சமஸ்தானத்தில் யாருக்காக காப்பாற்றப்படுகின்றது? நிச்சயமாக இங்குள்ள சில ஆயிரக்கணக்கான பார்ப்பனர்களின் பொருட்டே. சிறிதளவில் பார்ப்பனரல்லாத சாதி இந்துக்களின் பொருட்டாகவும் இருத்தல் கூடும்.

### சாதி இந்துக்களும் கோயில்களும்

90 ஆண்டுகட்கு முன்னர் 1600 இந்துக் கோயில்கள் இருந்தன. சமஸ்தானத்தின் பார்வையில்லாத 8000 கோயில்களும் இருந்தன. மொத்தத்தில் சுமார் 40,000 கோயில்கள் இருந்தன வென்று கூறலாம். இந்தக் கோயில்கள் 10 லட்சம் ஜாதி இந்துக்களுக்கேயாகும். இத்தகைய கோயில்கட்குள் எஞ்சிய சாதி இந்துக்களல்லாத 10 லட்சம் பேர்கள் நுழைய முடியாது. திருவிதாங்கூர் இந்து சமஸ்தானமாக இருந்ததிலிருந்து மாறி வருவது கோயில்கள் குறைவினாலல்ல. சடங்குகளின் குறைவாலன்று. சாதி இந்துக்கள் குறைவாலன்று. பார்ப்பனர்கள் குறைவாலுமன்று.

### ஸ்ரீ நாராயண குருசாமி

இன்றைக்கு இச் சமஸ்தானம் ஒரு இந்து சமஸ்தானமாய் இருப்பது இங்குள்ள நாகரீகத்திற் சிறந்த வகுப்பினரான ஈழுவ வகுப்பினராலும், அறிவில் மிகுந்த இவர்களது குரு ஸ்ரீ நாராயண குருசாமியாலுமாம். வைணவச் சீர்திருத்தப் பெரியார் இராமாநுஜருக்குப் பிறகு இக் காலத்தில் நிகரற்று விளங்கினவர் ஸ்ரீ நாராயண குருசாமியே யாகும். இவர் கிறிஸ்துவர்களாக மாறிய ஈழுவர்கள் தீயர்கள் இவர்களை மீண்டும் இந்துக்களாகச் சேர்த்துக் கொண்டதுமன்றி ஈழுவர்கள் என்றும் மதமாறாமலிருக்கும் படிக்கும் தக்க முயற்சி செய்துவந்தார். தீயர்களும் ஈழுவர்களும் பௌத்த மதத்தைச் சார்ந்து கொள்ள விரும்ப அதனையும் இவர் தடுத்து இந்துக்களாகவே இருந்ததற்கு இவர் செய்த வேலை மிகவும் பாராட்டத் தக்கதாகும். இதற்கிடையில் சாதி இந்துக்களல்லாத அறிஞர்கட்கெல்லாம் கோயில்களில் நாயன்மார்களாக, ஆழ்வார்களாக இடங்கொடுக்கப் பெற்றிருந்து வந்ததை சாதி இந்துக்கள் இன்று உணர்வார்களாயின், ஸ்ரீ நாராயண குருசாமிகட்குத் திருவிதாங்கூரில் உள்ள எல்லாக் கோயில்களிலும் சிலா ஸ்தாபனம் ஏற்படுத்தி வழிபாடும் செய்தாக வேண்டும்.

### சாதி இந்துக்களல்லாதவர்கள்.

சாதி இந்துக்களல்லாதவர்களைப் பொறுத்தவரையில் சாதி இந்துக்களின் மனப்பான்மை சிறிதும் மாற்றமடையவில்லை. சாதாரண குடித்தன வசதியும் இவர்கட்கு அளிக்கப்படுவதில்லை. நாகர் கோயில் முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் முனிசிபல் கிணறுகளில் கூட அவர்கள் ஜலங்கொள்ள முடியாது. முனிசிபல் சாலைகளை உபயோகித்தல் கூடாது. முனிசிபல் விளக்குகளில் வெளிச்சத்தை அனுபவிக்கலாகாது. இக் கொடுமைகளைப் பற்றிக் கூறுவதற்கு இச் சொற்பகாலம் போதியதன்று.

இந்த விஷயங்களை யெல்லாம் திருப்திகரமாக முடிவு செய்ய வேண்டியது நமது கடமையாகும். இப்பொழுதுள்ள இந்து மதத்தையும் அதன் சாதிக் கொடுமைகளையும் ஏற்று நாம் திருப்தியடையச் சித்தமாய் இருப்போமாயின் நம்மை சுவாமி விவேகானந்தர் பித்தர்கள் என்று கூறியது பொய்யுரையா என்று ஆலோசிக்கவேண்டும்.

## தலைவர் சொற்பெருக்கு.

மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார் அவர்களைப் பிரேரேபித்தார். ஹைகோர்ட்டு மாஜி நீதிபதி திரு. எம். கோவிந்தன் அவர்கள், ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயாரம்மாள் அவர்கள் திரு. குஞ்சுலட்சுமணபிள்ளை அவர்கள், திரு சொ. முருகப்பா அவர்கள், பட்டுக்கோட்டை திரு. கே. வி. அழகர்சாமி அவர்கள் ஆகியோர் ஆதரித்துப் பேசினர். நீண்ட கரகோஷத்தினிடையே தலைவர் எழுந்து தமது தலைமையுரையை நிகழ்த்தினர். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:-

சீமாட்டிகளே! சீமான்களே!!

இங்கு கூடியிருக்கும் அனைவரையும் சந்திப்பதில் எனக்குள்ள மகிழ்ச்சிப் பெருக்கைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் எனக்கு இன்று இவ்வுயர்ந்த மதிப்பை அளித்தமைக்கும் நான் வந்தனமளிக்கிறேன்.

செங்கற்பட்டில் சென்ற பிப்ரவரி மாதத்தில் முதலாவது மாகாணச் சுயமரியாதை மகாநாடு கூடிய அன்று தொட்டு சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி மிகுந்த விவாதம் ஏற்பட்டு வந்தது. இவ் வியக்கத்தின் தத்துவம் என்ன, அதன் லட்சியம் என்ன, என்பதுபற்றி நான் ஏற்கனவே ஒருமுறை விளக்கிக் கூறியுள்ளபடியால் மீண்டும் இதன் தொடர்பாய் நான் விவரிக்க விரும்பவில்லை. செங்கற்பட்டு மகாநாட்டு நிகழ்ச்சியின்போது கூடியிருந்த பெருந்திரளான மக்கள் இவ்வியக்கத்தின் அடிப்படையான தத்துவத்தையும், நடைமுறைகளையும் கண்களை மூடிக் கொண்டு ஏகமனதாய் ஆமோதித்துவிடவில்லை. அரசியல், மதவியல், சமூக இயல் முதலியவைகளில் உள்ள பலவாறான கருத்துக்களும் அதுகாலை எடுத்தியம்பப் பெற்றன. மதத்தில் அபரிமிதமான பற்றுக் கொண்டவர்களும், சீர்திருத்தத்தில் அதிதீவிரம் படைத்து தமது கொள்கையில் சிறிதும் விட்டுக்கொடுக்க மனமில்லாதவர்களும் அங்கு குழுமியிருந்து ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துரைத்தனர். மகாநாட்டில் நிலவிய மனோஎழுச்சியையும் ஆர்வத்தையும் உங்களில் அங்கு விஜயம் செய்திருந்தவர்கள் செவ்வையாய் உணர்ந்திருப்பீர்கள். ஜனங்களின் ஆர்வமும் ஏக மனமுமே ஒரு முடிவிற்கு வர இடந் தந்தன. இதுவே இவ் வியக்கத்துக்கு விரோதிகள் மனத்தில் திகிலை விளைத்து விட்டது. மகாநாட்டு நிகழ்ச்சி

யின் பின்னர் நிகழ்ந்த விவாதங்கள் சொந்தப் பொறாமையாலும் சகிப்புத் தன்மையில்லாமையாலும் விளைந்தனவென்று நான் கூறுவதற்கில்லை. ஜனங்கள் ஒருமிக்க விழிப்படைந்து விட்ட உண்மையினையே இவ் வியக்கம் மெய்ப்பிக்கின்றது. திருவாளர். ஈ. வெ. இராமசாமி அவர்களும் அவர்சார்பினரும் இவ் விழிப்புணர்ச்சியை அப்படியே பிறர்க்கெடுத்துக் காண்பிக்கின்றனரே! அன்றி, ஒரு புதிய கொள்கையைக் கண்டுபிடித்து அதற்குப் பிரசாரம் புரிபவர்களல்ல. அபிமானமற்ற சிலர் இப் புதிய உணர்ச்சியின் உண்மைத் தோற்றத்தை அறிந்துகொள்ள இயலாதவர்களாயிருப்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. எப்பொழுதும் சூழ்ச்சியே குடிகொண்ட சில அரசியல் இந்திர ஜாலக்காரர்கள் இதைக்கொண்டு விஷமத்தை விளைத்து அதிலிருந்து அடைந்த இழிதகையான ஒருவகை ஆனந்தத்தைப் பற்றியும் நமக்குக்கவலையில்லை. எந்த விஷயத்திலும் குறும்புத்தனம் செய்வது என்பது சிலரின் தொழிலாய் இருக்கின்றது. இதுவே பார்ப்பனீய எண்ணம் படைத்த சமூக-மத-அரசியல் கள்ளக்கூத்தாடிகளின் தொழிலாகும். இந்துமத தர்ம பரிபாலனம் பற்றி சென்னைசட்டசபையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமாயின் உடனே இத்தகையார் தங்கள் மதம் போயிற்று என்று கூக்குரலிடத் துவங்குவர். இந்தியா சட்டசபையில் சிசுமண நிவாரணச் சட்டமொன்று நிறைவேற்றப்பெறுமாயின், உடனே சமூகமே (இவர் சமூகம் தம் பெண்டு பிள்ளைகளே) பாழ்ந்தது என்று தொண்டைவரள ஓலமிடுவர். தனக்கு எவ்வளவு மதிப்பு வேண்டுமோ அவ்வளவு மதிப்பு தானும் பிறர்க்குக் கொடுத்தாகவேண்டும் என்று ஆழ்த்தி வைக்கப்பெற்ற ஒரு சமூகம் உணர்ந்து கொண்டதாயின், உடனே இவர்கள் கடவுள் பாழ்ந்தது, என்று தம்து அறிவீனத்தை விளக்கிக் கூச்சலிட ஆரம்பித்து விடுவார்கள். இவ்வளவு எளிதில் இத் துணை அற்பமான ஒரு விஷயத்தில் கடவுளுக்கு ஆபத்து நேரிடுமாயின், அக்கடவுளுக்குக் கோயில் எதற்கு? கடவுள் உண்டா இல்லையா என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லையென்று நான் என் சொந்தப்பொறுப்பில் கூறுகின்றேன். எனக்கு ஒரு கடவுள்மீதுதான்நம்பிக்கை. அது அன்பெனப்படும். எனக்கு ஒரு கோவில் மீதுதான் நம்பிக்கை அது மனிதன் எனப்படும். கடவுளைப் பொய் என்கின்றார்கள், கோயில்களைஇடிக்கவேண்டும்என்கின்றார்கள் என்பதாகப் பிதற்றுவதெல்லாம்வெறும் பிதற்றல்களே.

ஒவ்வொரு மனிதனும் தன் கருத்திற்கேற்ற அபிப்பிராயத்தைக் கொள்ளுதற்கு உரிமை உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். மதத்தில் ஒருவனுக்குப் பற்றுதல் உளதாயின் அதனை அவன் தன் ஜீவாதாரமாகக் கருதி இறுகப் பிடித்துக் கொள்ளட்டும். ஆனால் இந்த நம்பிக்கையினை எல்லோரும் கொள்ளவேண்டும் என்று அவன் பிறரை வற்புறுத்தித் துன்புறுத்தாதிருக்கட்டும்.

அறியாமையாலும், மூடநம்பிக்கையாலும் அனுசரிக்கப்பெற்றுவந்த பண்டைய வழக்கங்களைக் கடந்து நிற்கும் கல்வியறிவுடைய இளைஞரிடத்திலும், கற்றறிந்த முதியவர்களிடத்திலும் இப்பொழுது ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். பழக்கவழக்கங்கள் தம் பகுத்தறிவுடன் முற்றிலும் முரண்படுவதை அவர்கள் காண்கின்றார்கள். மனுதர்ம சாத்திரங்களைப் போன்ற சாத்திரங்கள் எவ்வாறு கடவுள் நெறியாக இருத்தல் கூடுமென்று சந்தேகித்து இவைகளின் உண்மையை ஏற்க மறுக்கிறார்கள். நாளுக்குநாள் வலுத்து வரும் இக்கிளர்ச்சிதான் சுயமரியாதை இயக்கத்தின் பிறப்பிடமாகும். அளவு கடந்த அதிருப்தி ஏற்பட்டவுடன் எந்த விஷயத்தையும் தம் பகுத்தறிவைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்துப் பகுத்தறிவிற்குடன்பட்ட விஷயங்களையே அங்கீகாரம் புரிவது என்று முடிவுசெய்துவிட்டமை இயற்கையே. இந்த ஆராய்ச்சியில் தான் நமது சமூகத் தீமைகள் அகப்பட்டன. தனக்குத்தானே கர்த்தா என்று கருதி அதற்கேற்றபடி நடந்து கொண்டகாலம் ஒன்றிருந்திருக்கலாம். இதன் பின்னர்தான் சமூக வாழ்க்கையின் உணர்வை உணர்ந்திருக்கக்கூடும். இச் சமூக உணர்ச்சி மனிதர்கட்குள் ஏற்பட்ட நெடுங்காலத்துக்குப் பிறகுதான் மதப் புரட்டுகளும் அரசியல் எண்ணங்களும் உதித்திருக்க வேண்டும். மனிதனுக்கு இயற்கையாகவே ஒரு அச்சம் உள்ளது. இவ்வச்சமானது அவனவன் இயற்கை உண்மையின் அறிவின் வேற்றுமைப்படி குறைந்தோ, நிறைந்தோ விளங்குகின்றது. எனவே, இவ்வச்சத்தை மனித சமூகத்தினின்றும் நீக்க மதம் என்னும் ஒன்று தலையெடுத்து, பல மர்மங்களை விளக்கிக் கூறத்துவங்கியது. உண்மை ஞானம் அச்சத்தைத் தவிர்க்கும் அருமருந்தாகும். இந்த உண்மை ஞானத்தை அடைந்தவர்கள், அடையாதவர்களை ஆழ்த்திவைத்து அடிமை கொள்ளும் துர் எண்ணத்தால், தாம் அடைந்த உண்மைஞானத்தை மறைக்கலாயினர். இத்துடனில்லாமல், பிறரை நீடித்து அடிமைப் படுத்தும் கருத்தோடு அவர்களை அஞ்ஞானத்தில் என்றென்றைக்கும் ஆழ்த்தி வைக்கப் பலவித சூழ்ச்சிகளையும் இஞ்ஞானத்தைக் கொண்டு கற்பிக்கத் துவங்கினர். தாங்கள் அறிந்த அரைகுறை ஞானத்திற்கு முரணாக எது தோன்றியபோதிலும் அது மதத் துரோகமும், கடவுள் தூஷணையும், நாத்திகமும், ஆயிற்று. பகுத்தறிவு முதிர்ந்து வளர்ச்சிபெற்றுப் பரவிய நாகரீகமடைந்த எல்லாத் தேசங்களுமே இதற்குச் சான்றாய் நிற்கின்றன. இதற்கேற்பவே பண்டைய மங்கிப்போன ஞானத்தின் தற்காலப் பொக்கிஷதாரர்களாய் இருப்பவர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட பகுத்தறிவு இயக்கத்தினரை மதத் துரோகிகள் என்றும், கடவுள் தூஷணை புரிபவர்கள் என்றும், நாத்திகர் என்றும் தூற்றுகின்றனர். இவ்வாறு தூற்றிப் பாமர மக்களைப் பகுத்தறிவியக்கத்தினர் மீது துவேஷம் கொள்ளும் சூழ்ச்சியைக்கை[illegible]ள்கின்றனர். இம்மட்டோ? அவர்கள் அரசியலில் கூட இவர்களின் மதம் கலந்து கொள்ளுகின்றது! சமூகத்தை, மதத்தைக்கொண்டு இவர்கள் உருவப்படுத்துகின்றார்களே ஒழிய, சமூகத்தை மதத் தொடர்பின்றி நினைக்க மறுக்கின்றார்கள். மதந்தான் அவர்கட்கு எல்லாம். மதந்தான் அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரம்.

இவர்கள் புரட்டை உள்ளும் புறமும் துருவிதெள்ளத்தெளிய பிறர்க்கு இது புரட்டென்று நமது தலைவர்கள் எடுத்துக்காண்பிக்கலாயினர். இது தான் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் ஆதரவின் கண் பார்ப்பனரல்லாதார் இயக்கமாகவும், சுயமரியாதைக்கொடியின் கீழ் சுயமரியாதை இயக்கமாகவும் பரிணமித்தது. பார்ப்பனரல்லாதார் இயக்கம் விசேடமாய் அரசியல் இயக்கம் எனினும், இது சமூக இயலையும் புறக்கணித்து விடுவதில்லை.

இது பார்ப்பனரல்லாதாரின் அரசியல் சுயமரியாதைக்குப் போராடுவதாகும். இவ்வியக்கம் துவக்கப்பட்டபோழ்து பிறப்பால் சாதிச் செருக்குக் கொண்டவர்களும், இயற்கையாகவே விஷமம் கொண்டவர்களுமான பார்ப்பனரை ஒதுக்கிவிட்டது.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பின்னர் துவக்கப்பெற்ற மற்றோர் பெரும் இயக்கமாகிய சுயமரியாதை இயக்கம் முன்னைய இயக்கத்தின் துணை இயக்கமாய் இருந்து வேலை செய்யும் தன்மையை உடையதாய்க் காணப்படுகிறது. அரசியல் முன்னேற்றத்திற்கு சமூக முன்னேற்றமே முதற்படி யென்பதை இப் புதியஇயக்கம் வலியுறுத்திக் காட்டுகின்றது. இவ் வியக்கத்தின் கர்த்தாவாகிய திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒரு காலத்தில் பார்ப்பனர் சார்பை நாடியிருந்தமை நமக்கு ஒரு பெரும் சாதகமாகவே முடிந்தது. ஏனெனில், அதனால் தான் பிறருடைய கொள்கைகளின் வேற்றுமையைப் பக்கத்திலிருந்து அநுபவத்தால் உணர்ந்து கொள்ளும் சாதகம் இவருக்குக் கிடைத்தது. இவ்வநுபவ முதிர்ச்சியானது இரட்டித்த பலனைக் கொடுத்தது என்று கூறவும் வேண்டுமோ?

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் வழிகாட்டியாய் இருக்க, இவரை திருவாளர்கள். சண்முகம் அவர்களும், ஜியார்ஜ் ஜோசப் அவர்களும் பின் தொடர்ந்தனர். வேடன் வலைப்பட்ட வாங்கு, இவர்கள் எல்லாச் சமூகக் கொடுமையாளர்களின் மதப் புரட்டுகளையும் அரசியல் புரட்டுகளையும் அவர்களுடன் இருந்து அநுபவத்திலுணர்ந்து கொண்டு, அவைகளை வெறுத்து அநுபவ முதிர்ச்சியுடன் இப்பொழுது நமது இயக்கத்தில் பிரகாசிக்கின்றனர். இவர்கள் அநுபவங்களெல்லாம் பார்ப்பனீய சுயநலக்காரர்களின் புரட்டுகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் சான்றுகளாய் நிற்கின்றன.

சீமாட்டிகளே, சீமான்களே, நாங்கள் எங்கள் துக்ககரமான அநுபவத்தின் பயனாய்த் தான் இப்பொழுது சுயமரியாதை இயக்கத்தினர்களாக மாறிப் பார்ப்பனீயத்தை வேரறுக்க முனைந்து நிற்கின்றோம். ஆனால், பிரிட்டிஷ் இந்தியா ஒருவகையாக இருக்க-திருவிதாங்கூர் வேறொரு வகையாய் இருக்கின்றது. சில விஷயங்களில் பிரிட்டிஷ் இந்தியர்களினும் நீங்கள் அதிக முன்னேற்றமடைந் திருக்கின்றீர்கள். சில

தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.

## பால்கன் பெண்கள் வெற்றி

—0—

### பலதார மணம் ஒழிந்தது.

பால்கன் நாடுகளிலுள்ள பெண்கள் ஆண்களுடன் போராடும் சமஉரிமைப் போராட்டத்தில் இரண்டு வெற்றிகள் அடைந்திருக்கின்றனர். கிரீஸ் தேசத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரிந்த பெண்களுக்கு முனிசிபல் ஓட்டுரிமை வழங்கி யிருக்கிறார்கள். ஜுகோஸ்லோவியாவில் பலதார மணத்தை ஒழித்து விட்டனர். கிரீஸ் தேசத்தில் சென்ற தட்வை ஜனத்தொகை கணக்கெடுத்ததில் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக இருந்தார்கள். ஆனால் அநேக பெண்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகஇருந்தார்கள். அங்குமுன்னால் பாஸ்னியா, ஹெர்சகோவிநு என்று வழங்கப்பட்ட முஸ்லீம்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களிடையே பலதார மணம் வழக்கத்திலிருந்து வந்தது. ஆனால் இந்த ஜனவரி மாதம் முதல், ஒரு மனைவிக்கு மேற்பட்ட மனைவிகளை விவாகஞ் செய்கிறவர்கள்,தண்டனைக்குள்ளாவார்கள்.முஸ்தபா கமால்பாஷாவின் ஆளுகையில் வந்த துருக்கி பலதார மணத்தை ஒழித்து விட்டது. சமீபத்தில் முனிசிபல் தேர்தல்களில் பெண்களுக்குஓட்டுரிமையும்வழங்கிஇருக்கிறது.

—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியது அவர் பெருமையைக் குறைப்பதாகவேயிருக்கிறது. உயிர் நூலாராய்ச்சியாளர் காக்கைகளுக்கு இரண்டு கண்களும் இருக்கின்றனவென்றும் அவை பார்க்கும்போது ஒரு புறம் சாய்த்துப் பார்க்கும் இயல்பின என்றும், உலகினர் காக்கைக்கு ஒரு கண்ணே இருக்கிறது, அது இரண்டு புறம் பார்ப்பதற்கும் பயன்படுகிறது, என்று கூறுவது அறியாமையே என்றும் கூறுகின்றனர். இதுதான் உண்மை. இச் சாதாரண உண்மையைக் கூட அறியாமல் கம்பர் "காகமுற்றும் ஓர் கண்ணிலவாக்கியவென்றியை" என்று கூறுவது பொருந்தாக்கூற்றாம். மேலும், இக்கூற்று இராமன்மேல் அறியாமையையும் கொடுந்தன்மையையும் ஏற்றியதுமாகும். கம்பர் இது இராமனுக்குப் பெருமை தருவதெனக் கூறிப்போனார். அனால் இது உண்மையில் இராமனை அறிவில்லாத வன்கண்ணன் என்று காட்டுகிறது. எவனோ ஒருவன் தன் மனைவியின் கொங்கையைக் காக்கையுருக்கொடு குத்தினதற்காக அவன் எந்த உருவைக் கொண்டானோ அந்தப் பறவைகளையெல்லாம் ஒரு கண்ணிலவாகச் செய்தது அறிஞர் செயலாமா? அன்றி இரக்கமுடைய மனிதர் செயலாமா? அறிவற்ற சண்டாளரும் இக் கொடும் பாவத்தைச் செய்யத் துணியாரே! இதை மிகவும் இரக்கமுடையவனைப் போலக் காட்ட விரும்பும் இராமன்மேல் கம்பர் ஏற்றியது வியப்பே. இனிமேற் செல்லுவாம்.

## தீண்டாமையை விலக்க மசோதா.

—

பம்பாய் சட்டசபையின் பிப்ரவரி மாதக் கூட்டத்தின்போது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு டாக்டர் அம்பேத்கார் தீண்டாமைவிலக்கு சம்பந்தமாயும், தாழ்த்தப்பட்ட வகுப்பார் முன்னேற்றத்தைக் குறித்தும், மற்றும் சமுதாய சீர்திருத்த சம்பந்தமாயும் பல மசோதாக்கள் கொண்டுவருவதற்கு நோட்டீசு கொடுத்திருக்கின்றார். அம்மசோதாக்களில் ஆலயங்களுக்குச் சிறுவர்களையும் சிறுமிகளையும் பொட்டுக்கட்டி விடுவதை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரை உயர்ந்த வகுப்பார் சமுதாய பகிஷ்காரம் செய்தால் தண்டிக்கவும், மிராசுதாரர்களின் கொடுமைகளைத் தவிர்க்கவும் அதிக வட்டி வாங்கும் கொடுமையைத் தவிர்ப்பதற்கும் பல திட்டங்கள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. தீண்டாமை விலக்கு சம்பந்தமாகவும் தனிப்பட்ட மசோதாவொன்றும் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

—

## கர்ப்பத்தடையில் நவீனமுறை

—

ஜெர்மன் டாக்டர் ஷிமர்ஸ் என்பவர் சமீபத்தில் பெண்களை மலடாக்குவதற்கு ஒரு நவீன முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். பல ஜெர்மன் டாக்டர்கள் அம்முறை ஜன சமூகத்திற்கே மிக அபாயகரமானதெனச் சொல்லி அவரைப் பகிஷ்கரித்து ஜெர்மன் சர்வ கலாசாலையில் அவரை பிரசங்கம் செய்யாதவாறு தடுத்துவிட்டனர். இவ்விஷயமாக ஜெர்மன் பார்லிமெண்டில் சமூக ஜன நாயகக் கட்சியார் பல கேள்விகள் கேட்டதன்றி டாக்டர் ஷிமர்சை அம்மாதிரி நடத்தியது மிக அநீதியாகுமெனச் சொன்னார்கள். பின்பு ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் டாக்டர் ஷிமர்சைப் பெரிதும் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

—

## திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி பேச்சு.

—

சனிக்கிழமை திருச்சி முனிசிபல் ஹாலில் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், இது போது சமுதாயம் ஒரு இயந்திரத்தைப் போன்றிருக்கிறதென்றும், வாழ்க்கை உற்சாகமற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறதென்றும், கட்டுப்பாடுகளில் அடங்கியிருக்கிறதென்றும், கட்டுப்பாடுகளை ஒழித்தால் தான் விடுதலை பெறலாமென்றும் கூறினார்.

—

## கலிகாலமெனக் கத்துவானேன்?

—

சகோதர சகோதரிகளே!

"உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" ஆதலால், திரு. இராமசாமிப் பெரியாரை நாஸ்திகரென்றும், எல்லாம் கலிகாலத்தின் கோலமென்றும், கண்ணீர்விட்டு மக்களை மயக்குகின்றார்கள். யார் கூறுகின்றார்கள்? எனது பெரியாருக்கு முன்னமேயே நம் பெரியார்கள் ஆஸ்திகர்களின் யோக்கியதையை எழுதி வெளியிட்டுள்ளார்கள். நேயர்களே! இக்காலத்த வரைமட்டும் இழிவுபடுத்தி எழுதிவைத்த அக்காலத்தவர்களின் யோக்கியதையையும், மும்மூர்த்திகளின் யோக்கியதையையும், கலியுக சமாதானம் என்னும் புஸ்தகத்திலுள்ளபடியே ஈண்டு வரைகின்றேன்.

இராகம் நாதநாமக்கிரியை, ஆதி தாளம்.

**பல்லவி.**

கோபஞ் செய்யாதீர்—இது கலியுகமென்று
தோஷஞ் சொல்லாதீர்

**அனுபல்லவி.**

கோபமகற்றுவிப ரீத புராணத்தின்
தாபத்தைக் கேளுங்கள் ஞாபகமற்றோரே. [கோப]

**சரணங்கள்**

தருமத்தை யொருபோதும்
தஞ்சமென்றடுத்தோரை
குரு பத்தினிமாரை
கொடுத்த கடனைக் கேட்டால்
கதை கட்டி னீரே
பதத்தில் வைத்தீரே
அடுத்தோரை வஞ்சித்து
அளவுக்கு மிஞ்சின
கடுத்தமுகக் குறி
கலியுகத்தார் நல்ல
வீண் கதை கட்டி
விபரீதமாக்கி
முறை வறை யில்லாமல்
முன் பின் யோசிக்காமல்
மறை மனு சாஸ்திர
மற்ற வீண் கதைகளே
புலம்பி விட்டீரே
கலங்க விட்டீரே
ஜாதி வரம் பில்லாமல்
சகல மதத்தினோரும்
ஈதலிரக்க குணம்
எண்ணம் போனபடி
சுருதி கொண்டாரும்
சொல்கிறேன் கேளும்
குந்தி யுகத் தாரென்ன
முதியோ ரிளைஞோரென்ற
அந்த யுகத் தாரென்ன
எல்லாஞ் சொன்ன லென்னை
கோபஞ் செய்யாதீர்
தோஷஞ் சொல்லாதீர்
கலியுகம் கலியுகம்
காணும் தொழிலுக் கெல்லாம்
வலியப் புளுகிவைத்த
வருத்தத் திளைஞோரை
மிகப் பெரியோரே
கவனித்துப் பாரே
வசிட்டனூர் வசி யென்னும்
வசிட்டன் சக்கிலிச்சிக்கு
பிறட்டன் சக்கிலிச்சிக்குப்
புலைச்சிக்கும் சந்திக்கும்
விதமறிவீரே
வியாசனென்பீரே
கலையின் வயிற்றில் கலைக்
காராவின் வயிற்றிலே
புலைச்சி வயிற்றில் ஜாங்கர்
புரளி நாரதர் வண்ணான்
நீரறிவீரே
தால் தெரிந்தோரே

தாங்கள் நினையாரென்றும்
வஞ்சித்திடுவாரென்றும்
கூட நினைப்பாரென்றும்
அடிக்கத் துணிவா ரென்றும்
முந்தியுகத்தாரை
இன்னும்
ஆஸ்தி சேர்ப்பா ரெனறும்
ஸ்ரீயைப் புணர்வா ரென்றும்
கல் மனத் தோரென்றும்
நெறி கடவாரென்றும்
கதைகள் புராணத்தை
போடி செய்வா ரென்றும்
தன்னை மதிப்பா ரென்றும்
விதி கடப்பா ரென்றும்
மெத்தப் படிப்பா ரென்றும்
கலியுகச் சிறுவரை
இன்னும்
ஜனித்திடுவா ரென்றும்
ஒன்றாய்க் கலப்பா ரென்றும்
யார்க்குமிரா தென்றும்
விண்ணுனம் சொன்னீரே
உங்கள் முன்னோர் ஜாதி
அந்த
முறையோடே நடந்தது
முறை யெங்கே யிருந்தது
இடையூறு செய்தது
பொல்லாதவ னென்று
இது கலியுக மென்று
கலியுக மென்றிப்போ
நாணிச் சிரித்துக்கொண்டு
வியாசன் கதையைக் கொண்டு
பொருத்த வைத்தீர்களே
முந்தி யுகத்தைக் கொஞ்சம்
அந்த
தாசி வயிற்றுப் பிள்ளை
வதுவை செய் மாப்பிள்ளை
பிறந்தான் சத்தியமுனி
பிள்ளை பராசரன்
மீன் வலைச்சி மகன்
காட்டுக்
கோட்டார் பிறந்ததும்
கௌதமருதித்ததும்
பிள்ளையாய் ஜெனித்ததும்
வீட்டிற் பிறந்ததும்
பல பல [கோப]

—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை எந்த வைணவனும் ஒத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது பஞ்சமனிடமும் அவன் பிரேதத்தினிடமும் ஸான்னித்தியம் இருந்ததா? சீரங்கத்து அய்யங்கார் பார்ப்பார்களிடம் ஸான்னித்தியம் இருந்ததா? இதை ஜி. கிருஷ்ணமாச்சாரியும், என். சீனிவாசாச்சாரியும் சனாதன தரும சபையிலிருந்த மந்தப் பார்ப்பார்களுமே சொல்லட்டும். சேவுகா விருத்திக்கே ஆசைப்பட்டு அதையடையவே இரந்து திரியும் இவர்களுக்கு ஜாதி ஆணவமும் அதற்கொத்த மமதையும் அதற்கு வேண்டிய அசூயையும் அதைக்கொண்டு மற்ற சமூகங்களைத் தாழ்த்திக் கொடுமை பண்ணவும் கற்றதுபோல் வைணவத்தைக் கற்கவில்லை.

சிவபெருமான் திருப் பேரூரில் பள்ளரோடு பள்ளராய் இருந்ததையும் காசிவிஸ்வநாதர் சங்கராச்சாரிக்குப் பறையனாக வந்து தீண்டாமை இல்லையென்று உபதேசித்ததையும் உணராத கொடுமையாளர்கள் கடவுளை அவர் சந்நிதியில் ஆராதிக்கச் செல்லுவோரைத் தடுப்பவர்களும் கடவுள் மனிதவர்க்கமனைத்திற்கும் பொதுவான பரம்பொருள் என்னும் மேலான கொள்கையையே மறுப்பவர்களும் நாத்திகர்களா? கடவுள் பொது, அவருக்கு நாமெல்லாம் ஒன்று, அவர் சந்நதியில், அவர் வணக்கத்தில், அவர் அருளில் எல்லாரும் சமம், என்று சொல்லுகிறவர்கள் நாத்திகர்களா?

இப்பொழுது ஆங்கிலம் படித்து வைதிக லாயர்களாகவும் அதிலும் சாஸ்திர விதிப் பிரகாரம் சந்நியாசம் வாங்கவேண்டிய வயது தாண்டினலும் பின்னும் வக்கீல் தொழிலில் பணம் சம்பாதிப்பதே தனது கடமை என்று இன்னும் திரியும் சனாதன தருமத் தலையின் வக்கீலும், மதவாழ்வே இன்னதென்று அறியாமல் கடைசிகாலத்தில் மடிகட்டி உத்திராக்ஷஜெபமாலையை எடுத்து பக்திகாட்டும் பென்ஷன் வாங்குகிறவர்களும், மலையாள இந்திய சமஸ்தானங்களில் சர்வ போகங்களையும் ஒழுங்கிற்கு விரோதமாய் அனுபவித்து உத்தியோகம் பார்த்து விலகியவர்களும் இங்கிலீஷ் ஓட்டலில் 8.மணிக்குமேல் போய் தின்று, குடித்து வருகின்றவர்களும் வெள்ளைக்காரர் பங்களாவில் பொட்லர் தயவுக்கு அவர்களுக்கு முன் வணங்கி முகஸ்துதி செய்யும் உத்தியோக அபிவிருத்திக் காரர்களும், சாஸ்திரவிதியால் பார்ப்பானுக்கு விதிக்கப்பட்டதில் ஒன்றுவது செய்யாமல் சாஸ்திரத்தால் தள்ளப்பட்ட சேவுகாவிர்த்திக்கும் தாகுத் தொழிலுக்கும் வாழ்நாளைத் தீர்மானம் பண்ணிவிட்ட பார்ப்பார்களும் சேர்ந்த சனாதனதரும சபையும் அதன் தீர்மானங்களும் இந்துசமயப் பிரிவுகளிலுள்ள எந்த இந்துப்பிரிவினர் கட்கும் பிரமாணமாகவிருக்க எதனாலும் நியாயமில்லை.

வேதங்களையும் அதன் சாஸ்திரங்களையும் சித்தாந்த ஸ்தாபனர்களான ஆச்சாரிகளையும் சனாதன தருமத்திற்குப் பிரமாணமாக எடுத்துக்கொள்ளும் எந்த இந்து சாஸ்திரமும் மேற்சொன்ன சனாதனதரும சபைகூடினவர்களையெல்லாம் சண்டாளர்களாகவும் பாவிகளாகவும் நிச்சயப்படுத்தும்.

பிரமானுபவத்திற்கும் மோட்சத்திற்கும் யாதொரு கர்மமாவது சமயக் கோட்பாடாவது ஜாதியாவது வர்ணமாவது ஒருவழிக் கொள்கையாவது அவசியமில்லையென்றும் பக்தி மார்க்கத்திற்கும் அத்துரையில் பிரமாணமாய் அங்கீகரிக்கப் பட்டுள்ளவர்கள் ஒருவன் மோட்சமடைவதற்கு வர்ணமாவது கோத்திரமாவது திணையாவது மனுஷிய ஜென்மம் கூடவாவது அவசியமென்று கூறினர்களில்லை. பக்தி ஒன்றே முக்கியமானது. நீங்கள் சாஸ்திரங்களை நம்புவது மெய்யானல், சாஸ்திரமே சனாதன தருமங்களுக்குப் பிரமாணமென்பது உண்மையானல், புராதன இதிகாசங்களிலுள்ள சில வார்த்தையை உங்களுக்குச் சொல்லுகிறேன். "சுத்தமான செய்கையுள்ளவனும் நன்னடைக்கையிலிருப்பவனுமானவன் கறுத்த சண்டாளனயினும் அவனைத் தேவர்கள் பிராமணனுக் கொப்பாக அறிகிறார்கள். பிராமணனயிருந்தும் பாவத்தைச் செய்கிறவனும் மிலேச்சனயிருந்தும் பரிசுத்தமும் தருமத்தைச் செய்கிறவனுமாயிருந்தால் அவர்களுள் மிலேச்சன் சிறந்தவனும் பிராமணன் மிக்க பாவியுமாவார்கள். எஜமானனுக்கும் மித்திரனுக்கும் க்ஷேமத்தை விரும்புகிறவனும் நியாயமான நன்மையைப் பேசுகிறவனும் எவனாகவிருந்தாலும் அவனையே தேவர்கள் கொண்டாடுகிறார்கள்." அடுத்த வியாசத்தில் ஸான்னித்யம்யாரிடமிருக்கும், எங்கிருக்கும் என்பதைப் பற்றி எழுதுகிறேன்.

## சென்னை
## விதவா விவாக சபை

மேற்படி சபையின் பிரசாரகர் திருவாளர் ஜி. ஆதிநாராயணா அவர்கள் இம்மாதம் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள் என்றும், அவர் அரக்கோணம், காட்பாடி, வேலூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், மொரப்பூர், சேலம் முதலிய இடங்களுக்கு முக்கியமாகச் செல்வார் என்றும், விதவா விவாக விஷயத்தில் அநுதாபமுள்ள அன்பர்கள் அவ்வவ்விடங்களில் அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்குமாறு வேண்டுவதாகவும், விதவாவிவாக சம்மந்தமான பிரசுரங்கள் முதலானவைகளை அவர்களிடமிருந்தே வேண்டுவோர் இனமாகப் பெற்றுக் கொள்ளலா மென்றும் மேற்படி சபையின் காரியதரிசி எழுதுகிறார்.

## நமது ஆதிதிராவிட சகோதரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தமிழ்மக்களே! பெரியோர்களே!! வாலிபர்களே!!! தமிழகத்தின் கண் திகழும் மக்களுள் சமத்வம், சகோதரத்வம், சுதந்திரமென்னும் சமரசமின்றிப் பல்வேறு சமூகங்களாகச் சிதறுண்டு, ஒற்றுமை குன்றி, உயர்வு தாழ்வைப் பாராட்டி, உண்மையை மறைத்து, உலகை ஏமாற்றியது வஞ்சக நெஞ்சுடைய வைதிகப் பார்ப்பனரென்பது யாவருமறிந்ததே.

தமிழ்மக்களில் பேதா பேதமின்றி சீரிய ஒழுக்கங்களோடு அறநெறி வழுவாமல் அன்புவாய்ப்பட்டு அகமகிழ்ந்து இன்புற்றிருக்குங்கால், ஆரிய மிலேச்சக் கூட்டத்தினர் நம் தாயகத்தினுட் புகுந்து யோக்கியமாய்ப் பிழைக்க வகையறியாமல், தமிழ்மக்களின்மீது பொறாமைகொண்டு, உத்தம சீலர்களைப்போல் நடித்து, அரசர்களையும், மக்களையும் மயக்கிப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தினபோதுதான் அறிவுடைய மக்கள் கண்டு அஞ்சி ஆரியக்கூத்தாடினலும் மயங்காமல் காரியத்தில் கருத்துள்ளவர்களாக இருங்களென்று எச்சரிக்கை செய்தும், நயக்காமல் பார்ப்பனர் சூழ்ச்சி வலையிலகப்பட்டுப் பரிதவித்தனரென்பது அறிஞர்களின் நோக்கமாகும். வஞ்சகம் வெளிப்படா வண்ணம் பார்ப்பனீய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவான்வேண்டி வேதம், சுருதி, ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய ஆபாசங்களை வரைந்து, அதற்குத் துணையாக வர்ணாச்சிரமத்தையும் மநு [அ] தர்ம சாத்திரத்தையும் கெட்ட, வேண்டாப்பழக்க வழக்கங்களையும், கூடா ஒழுக்கங்களையும் தமிழ் மக்களிடையில் புகுத்தினரென்பது பகுத்தறிவாளர்களது கொள்கை. இக் கொள்கைகளுக்குத் துணைநின்று செவிசாய்த்தோரை மேல் ஜாதியாரெனவும், செவிகொடாமல் புறக்கணித்தோரை கீழ் ஜாதியாரெனவும், வகுத்துத் தாங்களே [பார்ப்பனர்களே] பிரமாவின் முகத்திலிருந்து உதித்த உயர்ந்த ஜாதியாரெனவும் பரப்பி வந்தனரென்பது ஆராய்ச்சிக்காரர்களின் துணிபு. அப்படிப் பிரிக்கப்பட்ட மக்கள்தான் தற்பொழுது "பார்ப்பனன்" "சூத்திரன்" என்னும் மூன்றாவது பிரிவாகிய நாம் தாழ்த்தப்பட்ட ஆறரைக் கோடி ஆதித்திராவிட தமிழ் மக்களாகும். இதற்கு மேனாட்டு அறிஞர்களெல்லாம் குறிப்பெழுதி யிருப்பதோடு நம் தமிழகத்திலும் அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் மலிந்துள்ளன. காலச்சக்கர வீழ்ச்சியால் தாழ்வடைந்த நம் தமிழ் மக்களைத் தற்பொழுது நடாத்தும் நிலைமையை யுன்னிப் பார்ப்பவரது மனங்கசியாம லிருக்க முடியுமா? இரத்தம் கொதிப்பேறுமலிருக்கமுடியுமா? கன்னெஞ்சமும் கரையுமல்லவா?

தமிழ்மக்களே! வாலிபர்களே!! கோவிலில் சென்று சுவாமி தெரிசனம் செய்யவுரிமையில்லை. பொது விடங்களுக்குச் செல்ல உரிமையில்லை. குளங்களில் தண்ணீரெடுப்பதற்கும் குளிப்பதற்கும் உரிமையில்லை. இதுமாத்திரமா? அரங்கமேடைகளில் கூட, நடை, உடை, பாவனை, வார்த்தை, அழகு முதலியவைகளைக் காட்டி பரிகசிக்கின்றனர். நந்தனர் சரித்திரம், அரிச்சந்திர நாடகம், தோட்டி, தோட்டிச்சி பாகம் முதலியவைகளை நாடக ரூபமாக்கி நடிப்பதையும் நோட்டீசிலுங்கூட கேவலமாக விளம்பரப்படுத்துவதையும் கண்டும் சிந்தியாமல், பணத்தை வாரிக் கொடுத்து ஜாதி யிறுமாப்புடையவரைக் கொழுக்கவைத்து, நம் நாட்டு சனியனை விடுதலை செய்யாமல் நிலைநிறுத்த முன்னிற்கின்றீர்கள். நம் தமிழ் மக்களில்கூட அநேகர் நந்தனர் சரித்திரத்தையும், அரிச்சந்திர நாடகத்தையும் தோட்டி தோட்டிச்சி பாகத்தையும் விருப்புற்றும், கற்றும் அரங்கமேடைகளில் நடித்தும் வந்தார்கள், வருகிறார்கள்.)

சகோதரர்களே! வாலிபர்களே!! இன்னும் உறக்கமா? ஏன்? உங்களுக்கு வெட்கமில்லையா? சுத்த இரத்தம் ஓடவில்லையா? மானமில்லையா? நம் தமிழ்மக்கள் முன்னேறிச் செல்ல வழி தெரியவில்லையா? எத்தனை நாளைக்குப் பழிப்பையும் இழிவையும் சுமந்து நிற்கப் போகிறீர்கள்? சுதந்திரதாகம் உங்களுக்கு உதிக்கவில்லையா? சூரியன் உதித்தால் இருள் மங்குமாப்போல் உங்கள் அறிவை இன்றே ஸ்திரப்படுத்துங்கள். நந்தனர் சரித்திரத்தையும், அரிச்சந்திர நாடகத்தையும், தோட்டி தோட்டிச்சி நாடகத்தையும் நடிப்பதைக் கண்ணால் பார்க்கச் செல்லாதீர்கள். இதரர்கள் நடித்தாலும் செல்லாதீர்கள். நீங்களும் நடிக்காதீர்கள். நடிப்பவர்களைப் பகிஷ்கரியுங்கள். இதுவே நமது முன்னேற்றத்துக்கு முதல் அறிகுறியாகும். சகோதரர்களே! எல்லோரும் ஒன்றுகூடி ஆலோசியுங்கள். பார்ப்பனீயப்படுமோசத்தையுணர்ந்து உங்கள் நண்பர்களுக்கு உரையுங்கள். ஆங்காங்கு சிறியதேனும் பெரியதேனும் சங்கங்களைத் தோற்றுவியுங்கள். இதுவே எங்களது வேண்டுகோளும் உங்களது குலாபிமானமும் பணியுமாகும்.

சுயமரியாதை தமிழ் வாலிப சங்கம்,
உரிகம்.

---

## புரோகிதமொழிந்த திதி.

தென்காசி தாலூக்காவைச் சேர்ந்த கிடாரக்குளம் கிராமத்திலிருக்கும் சைவ வேளாள குலத்தில் உதித்த திருவாளர் கே. ஏ. நமசிவாய முதலியார் அவர்கள் தமது தந்தையாரின் முதல்வருஷத்திதியைபார்ப்பனப் புரோகிதமில்லாமல் டிசம்பர் மாதம் 17-ந் தேதி செவ்வாய்க்கிழமை யன்று தமது பந்துமித்திரர்களுக்கும் சில ஏழைகளுக்கும் திருப்தியாய் போஜனம் செய்வித்துச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## நந்தனார் காலட்சேபத்திலும் பார்ப்பனப் புரட்டு.

ஜனவரி 8௳ புதன்கிழமை ஆம்பூர் நாகநாத ஈஸ்வரர் கோவிலில், திருநாளைப்போவார் என்னும் நந்தனார் சரித்திரமானது, செங்கல்பட்டிலிருந்து வந்திருந்த பாகவதர் ஒருவரால் நடைபெற்றது. அவ்விடம் மேற்படி பாகவதர் சொல்லிவந்த கதையில், நந்தனாரின் பிறப்பும் வளர்ப்பும் விபரமாய்ச் சொல்லாமல் ஆதனூர் கிராம மிராசுதாரராகிய வேதியரிடம் அடிமைத் தொழில் புரிந்துகொண்டிருந்த நந்தனின் சரித்திரமென்றும் ஆரம்பித்து கதையை சொல்லிக்கொண்டுவந்தார். அங்கு விஜயம் செய்திருந்த நண்பர்களில் சிலர் நந்தனாரின் பிறப்பும் தாய் தந்தையர்களின் பெயரையும் சொல்லாமல் கதையை ஆரம்பித்துவிட்டீர்களே, தயவுசெய்து விபரமாயச் சொல்ல வேண்டுமென்று கேள்வி கேட்டதின்பேரில் அதற்கு மேற்படி பார்ப்பனப் பாகவதர் தகுந்த உபமானம் சொல்லாமலும் எந்தப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நந்தனாரின் பிறப்பும் தாய் தந்தையர் பெயர்களும் கிடையாதென்றும், கேட்ட கேள்வி அனாவசியமானதென்றும் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் பதில் சொல்லிவிட்டார். அதன்பேரில் ஜனங்கள் அதிருப்தியோடு வெளியே வந்துவிட்டார்கள். வெளியே வந்ததின் பிறகு மேற்படி பாகவதர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லமுடியாமல் ஏதேதோ வாயில்வந்தபடி உளறினதாகக் கேள்விப்பட்டோம். இப்படியும் பாகவதர்கள் என்று போலிவேடம் பூண்டு யோக்கியமான வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமல் ஊர் ஊராய்த் திரிந்து பாமர ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறித்து வயிறு பிழைக்கும் பிராமணப் புலிகளின் புரட்டுக்களை என்னென்று சொல்வது? கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் இந்த யுகங்களிலெல்லாம் நடந்த கதைகளுக் கெல்லாம் காரணமாக தாய், தகப்பன், பிறப்பு, வளர்ப்பு விபரமாய் எழுதி வைத்திருக்கும் நமது இந்துமத புராணங்களில் சுமார் 5000-வருடங்களாகும் இக் கலியுகத்தில் இம் மானிடப் பிறவியில் ஜனித்த நந்தனுக்கு மாத்திரம் தாய், தகப்பன், பிறப்பு, வளர்ப்பு விபரம் இல்லாதிருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இக் கலியுகத்திலும் தாய் தகப்பனில்லாமல் பிள்ளை பிறந்ததென்றால் உலகம் ஒப்புக்கூடியதா? இச் சரித்திரம் கேட்டதிலிருந்து இவ்விதமாகவேதான், ஒவ்வொரு புராணங்களையும் ஆரியர்களாகிய பிராமணர்கள் சுத்த அபத்தமாகவும் ஆபாசமாகவும், எழுதிவைத்திருப்பார்களென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவருகிறது. என்று ஒரு நிருபர் எழுதுகிறார்

---

## வீரபத்திரன் பட்டியில்

## வாலிபவீரரின் விஜயம்

சிவகெங்கை "ஆதித்தமிழர் கைத்தொழில் கல்வி நிலயத்தின்" தலைமை உபாத்தியாயரான மாஸ்டர் சசிவர்ணம் அவர்களும் அன்னவரின் அன்பார்ந்த நண்பர்களான மாஸ்டர்கள் அனந்தராம், செல்லம், மாதவம், சண்முகநாதம், சின்னடைக்கம் முதலியோரும் அன்னவர்களின் ஆதித்திராவிட மாணவ மாணவிகளான கண்ணுச்சாமி, சொர்ணம்மாள், முத்துலெக்ஷிமி முதலியவர்களும் 28—12—29-ந் தேதியன்று வீரபத்திரன் பட்டிக்கு விஜயஞ் செய்தனர். மதுபானத்தினால் மதிமயங்கி அறியாமையில் அழுந்திக்கிடக்கும் இச்கிராமவாசிகளுக்கு நமது வாலிப சகோதரர்கள் அருமருந்தன்ன புத்திமதிகளைப்போதித்தனர். மாஸ்டர். சசிவர்ணம் தெளிவும் விரிவுமான போதனைகளினிடையே அவரின் அருமை மாணவிகளான சௌபாக்கியவதி சொர்ணம்மாளும் முத்து லெட்சுமியும் இன்னிசைக்கீதங்கள் பாடினார்கள். பொதுவாக நமது வாலிபவீரர்களின் விஜயமானது இவ்விடத்திய மக்களுக்குள் தீண்டாமைப் பேயைத் துரத்தியடிக்கும் ஒருவித புது உணர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றது. இவ்வுணர்ச்சியால் முன்னேற்றத்திற்கு அடிப்படையான கிளர்ச்சிகளுக்கு இடங் கொடுக்குங் காலம் கிட்டி விட்டதென நம்புகின்றோம். நமது வாலிப வீரர்கள் இவ்விடம் விஜயம் செய்த பிறகு பத்துப்பேர்களுக்கு மேற்பட்டவர்கள் மதுபானம் என்னும் விலங்கினின்று விடுபட்டு தீண்டாமை என்னும் பேயை ஒழிக்க முயல்கிறார்களென்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. என்று திரு. மாயாண்டி எழுதுகிறார்.

---

## திரு. கைவல்யம் அவர்கள் மீது,

மதுரை ஜில்லா, நத்தம் பரிமளம்

எஸ். முஹம்மது இஸ்மேல் அவர்கள் பாடியது.

### வெண்பா.

1. ஆரியர்க ளென்னுமதி யக்கிரமப் பார்ப்பாரின்
காரியங்க ளெல்லா நம் கைக்கு மெய்யாய்—பாரினிலே
வீண் புரட்டென்று வெளியாய் விளக்குவதி
லாண்மைக் "குடி அரசே" யாம்.

2. தெய்வத்தின் றன்மையிதென் றேதீரத் தேர்ந்துரைக்குங்
"கைவல்லி" யத்தினர்தங் கட்டுரைகள் மெய்மையதாய்
முற்றுங் துலங்க மொழிந்துறைத்தல் மூதுணர்வின்
கற்றோ ரறிந்திடுவர் காண்.

3. ஆஸ்திகர்தா மென்றே அறக்கடவு ளைப்போற்று
நாஸ்திகரின் கொள்கை நமக் காக்காதே—சூஸ்திரமாம்
வேதப்புரட்டை வெளியாக்கி விட்டுடைத்தா
ரோதுங் "கைவல்ய" ருலகில்.

4. சித்தம் அறிவிற் சிவானந்த மேம்பட்டே
பத்தி யிரக்கம் பரிவடைது—லெத்திசையுங்,
கொண்டாடுங் கொள்கைக் குடியரசைப் டார்ப்பவர்க்கே.
யுண்டாகு மாமென் றுணர்.

---

## திருமதி. குஞ்சிதம்—குருசாமியின் வந்தனம்.

ஈரோட்டில் டிசம்பர் 8-ந்தேதியன்று எங்களிருவருக்கும் நடந்த திருமணத்தைஆதரித்தும்,புகழ்ந்தும், பாராட்டியும் பல தந்திகள், கடிதங்கள் முதலியன அனுப்பிய கனவான்களுக்கும் நண்பர்களுக்கும்இன்னும் இதைஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றிய பல சங்கங்களுக்கும், தனித்தனி எழுத முடியாத காரணத்தால் எங்களிருவருடைய மனமார்ந்த நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
டி. எஸ். குஞ்சிதம்,
எஸ். குருசாமி.

---

## அடைபட்ட பார்வதி கோயில்.

—0—

### சத்தியாக்கிரகத்தின் பலன்.

—0—

சிறிது காலத்திற்கு முன்பு தீண்டப்படாதவர்களால் துவக்கப்பட்ட சத்தியாக்கிரக இயக்கத்தால் இரண்டு மாதங்கட்குமேல் அடைபட்ட பூனா கோயில், அரசாங்கம் போலீஸ் உதவி அளிக்குமானால் திறக்கப்படு மென்றும், அதுவிஷயமாக பூனா கலெக்டரிடம் யோசனை செய்யப்பட்டுவருகிறதென்றும் கோயில் தலைமை தர்மகர்த்தா கூறுகின்றனர்.

---


பழநி சி. எம். சாமி,

குருதாம்பிர பஸ்பம்

இது அபூர்வ சக்தி வாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம்! சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.

# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

சித்திர வர்ணப்படங்களுடன்

சென்னையினின்று வெளிவருகின்றது.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்! அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவர் அச்சமின்றி எடுத்து உரைக்கும்! வியாபார அனுக்கங்களை அவ்வப்போது விரிக்கும்! வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும், இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக:—

மாதிரி பிரதி இனம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.



# குடி அரசு புத்தகாலயம்.

வேதப் புரட்டை வெளியாக்கும்:—

| | |
|---|---|
| ஞானசூரியன் | (அச்சில்) |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. ... | 0—2—0 |

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



# அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.

ஸ்தாபன ௵ 1920.

இளமையிற் படிக்கவில்லையென்று வருந்தவேண்டாம்.

தமிழ்வாசிகர், எழுதத்தெரிந்த 109-பேர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸ்சுத்த தபால் மூலம் படிக்க எடுக்கப்படுகி ...ர்கள். அவர்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் ... செய்து காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தரப்பட்ட ...ளுக்கு இங்கிலாந்து, கொளும்பு, சிங்கப்பூர்களில் வாசிக்கலாம். ...யர், ஹையர் கிரேட் உபாத்தியார்களுக்கு அதிகப் பிரயோஜனமா ... தற்சமயஞ் செய்யும் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் யாதொ ...டையூறின்றி வாசிக்கலாம். தினசரி மாணவர்கள் சேர்ந்தவண்ண ...ருக்கிறார்கள். உடனே பிராஸ்பெக்டசுக்கு மூன்றரை அணா ஸ்டா... ...னுப்பவும்.

டைரக்டர்.



# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ...ரூ. | 3,56,05,275, |
| வசூலான ,, | ...ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.



# பேர்பெற்ற ஊதுவத்திகள்.

எங்களிடம் ஆகவர்த்தி, அம்பர்வத்தி, ஜவ்வாதுவத்தி, புனுகுவத்தி, கஸ்தூரிவத்தி, அநேக தினுசு ஊதுவத்திகள் நிரம்பவும் திடமான சரக்காய் தயார்செய்து, வியாபாரிகளுக்கு குறைவு விலையாகவே அனுப்புகிறோம். எங்கள் சரக்கு ஒரு தடவை வரவழைத்துப்பார்த்தால் பிறகு எங்கள் சரக்கை மறக்காமல் அடிக்கடி ஏராளமாய் ஆர்டர் செய்வீர்கள் என்று நம்புகிறோம். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பி. கே. பாலசுந்தரம் நாயுடு அண்டு கோ,
ரங்கசாமிகோயில் தெரு,
தந்தி—'மகாவிஷ்ணு' பெங்களூர்டவுன்.


# கலப்பு மணத்தால்தான் ஜாதி ஒழியும்

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி கண்ணம்மாளால் வெளியிடப்பட்டது.